விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 15 சனிக்கிழமை (28.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# பாதிக்கப்பட்டோரின் பங்களிப்பின்றி

# காணாமல் போனோர் பணியகம்

### ஏற்க முடியாது என மனித உரிமை கண்காணிப்பகம் சாடல்



(ஜெனிவா)

காணாமல் போனோர் தொடர்பான பணியகத்தை நியமிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களிடம் கலந்துரையாடவில்லை என தெரிவித்த மனித உரிமை கண்காணிப்பகம், இதன்மூலம் சர்வதேசத்திடம் வழங்கிய உறுதிமொழியை இலங்கை அரசு மீறி இருக்கிறது என குற்றம் சாட்டியுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## மிகச்சிறந்த நியாயசபை யாழிலேயே நிறுவப்பட்டுள்ளது

### நீதியமைச்சர் விஜயதாச தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்ள தொழில் நியாய சபைகளுடன் ஒப்பிடும் போது மிகச் சிறந்த நியாய சபை யாழ்ப்பாணத்திலேயே நிறுவப்பட்டுள்ளது என நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சினால் யாழ் மேல நீதிமன்றின் கட்டடத் தொகுதியில் நிறுவப்பட்டுள்ள தொழில் நியாய சபை அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றைய 23ஆம் பக்கம் பார்க்க....

### போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்த

## பொறுப்புக்கூறல் பொறிமுறை தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் ரணில் ஆலோசனை




(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூறுவதற்கான பொறி முறையை அமைப்பது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாதுகாப்புச் செயலர் மற்றும் இராணுவத்தின் மூத்த அதிகாரிகளுடன் 23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைத் தமிழர்களுக்கு எனது ஆதரவு எப்போதும் தொடரும்

### சம்பந்தனுக்கு கருணாநிதி பதில் கடிதம்



(கொழும்பு)

இலங்கை தமிழர்களுக்கான தனது ஆதரவு என்றும் எப்போதும் தொடரும் என்று இலங்கை நாடாளு மன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எழுதியுள்ள பதில் கடிதத்தில் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

13-வது முறையாக சட்டப் பேரவை உறுப்பினராக பதவியேற்ற தி.மு.க. தலைவர் மு.கருணாநிதிக்கு இரா.சம்பந்தன் வாழ்த்து தெரிவித்து கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பியிருந்தார்.

இதையடுத்து தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி, இரா.சம்பந்தனுக்கு பதில் கடிதம் 23ஆம் பக்கம் பார்க்க....

## அனர்த்த உயிரிழப்பு; 104 ஆக உயர்வு!

(கொழும்பு)

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் ஏற்பட்ட மரணங்களின எண்ணிக்கை 104 ஆக உயர்ந்துள்ளது.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் 24ஆம் பக்கம் பார்க்க....

## வாகனங்களின் விலை மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டதால் வாகனங்களின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மேலும் அதிகரிக்கப் பட்டுள்ளன.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் 24ஆம் பக்கம் பார்க்க....

### மக்களின் நிலத்தை கையகப்படுத்தும்

## இராணுவத்தின் முடிவு குறித்து உச்ச நீதிமன்றம் விசாரணை

(கொழும்பு)

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் யாழ் நகரில் அமைந்துள்ள மூன்று தனியார் காணிகளை கையகப்படுத்த இராணுவத்தினர் எடுத்துள்ள தீர்மானத்தின் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றதா என்பது 23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையின் தேசிய பாதுகாப்பு பலமாகவே உள்ளது - ஜனாதிபதி



(நகோயா)

இலங்கையின் தேசிய பாதுகாப்பு மேலும் பலம் அடைந்துள்ளதேயன்றி எந்தவகையிலும் பலவீனமாக இல்லை என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜப்பான் சென்றிருக்கும் ஜனாதிபதிக்கும், ஜப்பானில் வாழும் இலங்கையர்களுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று பிற்பகல் ஜப்பானின் நகோயா நகரில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். சந்தர்ப்பவாத அரசி 24ஆம் பக்கம் பார்க்க....

## மத்தியஸ்தர்களுக்கு நியமனம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபைகளின் (காணி) மத்தியஸ்தர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# துயர் பகிர்கின்றோம்



அமரர் சின்னத்துரை சிவஞானம்

யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ **சிவஞானம் சிறீதரன்** அவர்களின் அன்புத் தந்தை **சின்னத்துரை சிவஞானம்** அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கையை செலுத்தி அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-4723)

**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர்**
**கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை**


# அமெரிக்கா அணுகுண்டு வீசிய ஹிரோஷிமா நகரில் ஒபாமா



அமெரிக்கா அணுகுண்டு வீசிய ஜப்பானின் ஹிரோஷிமா நகருக்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சென்றுள்ளார்.

இந்த நகருக்குச் செல்லும் முதல் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாதான்.

வருத்தத்துடன் தோன்றிய ஒபாமா 1945 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அமெரிக்கதாக்குதலின் நினைவுச் சின்னத்துக்கு வெள்ளை மலர்களால் செய்யப்பட்ட மலர்வளையத்தை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அவருடன் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேவும் சென்றிருந்தார்.

ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசியது மனிதகுலம் தன்னையே அழித்து கொள்ளும்திறனை எடுத்துக்காட்டியுள்ளது என்று ஒபாமா தான் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

இரண்டாம் உலகப்போரின் கடைசி நாட்களில் நிகழ்ந்த அணுகுண்டு தாக்குதலின் விளைவாக 1,40,000 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் நுண்கலைக்கழகம்

**இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்-2015**
**கல்வியாண்டு 2013/ 2014**

- இரண்டாம் அரையாண்டு பரீட்சைகளுக்கான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களிடமிருந்து 01.06.2016 திகதியிலிருந்து 10.06.2016 திகதிவரை இராமநாதன் நுண்கலைக்கழக அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.
- இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் இசைத்துறை நடனத்துறை சித்திரமும் வடிவமைப்பும் அலுவலகத்திலிருந்தும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாட அலகிற்கு ரூபா 250/- வீதமும் மருத்துவ சான்றிதழ் சமர்ப்பித்து ஏற்றுக்கொள்ளப்பட்டோர் ஒரு பாட அலகிற்கு பரீட்சைக் கட்டணமாக ரூபா 250/- வீதமும் பரீட்சை பெறுபேற்றினை தரமுயர்த்துவதற்கு பாட அலகொன்றிற்கு ரூபா 500/- வீதமும் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் சமர்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

(சி-4719)

**உதவிப் பதிவாளர்,**
**இராமநாதன் நுண்கலைக்கழகம்.**



"மானம் பராயானைத் தொழ தானாய் வினைகள் அறும்



## வயாவிளான் மானம்பராயானின் சிரமதான அறிவித்தல்

வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையாரின் மெய்யடியார்களே! எமது ஆலய வீதியினைத் துப்பரவு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளமையால் நாளை ஞாயிறு காலை 8.30 மணிக்கு வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அருகில் கூடுமாறு அன்புரிமையுடன் கோருகின்றோம்.

பெருமளவு இளைஞர் கூட்டத்தை இப்பணிக்காக அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

தலைவர்-0775078025,
செயலர்:-0770333396
பொருளர்:-0773101462

இறைபணியில்
வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார்
ஆலய பரிபாலன சபையினர்.

(4787)



## ஏல விற்பனை

யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் கீழ் வரும் பொருட்கள் 08.06.2016 புதன்கிழமை காலை 10 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

- பழைய தளபாடங்கள்
- பழைய பாத்திரங்கள்
- பழைய புத்தகங்கள் -அதிபர்

(4783)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



# கண்ணீர் அஞ்சலி



அமரர் சின்னத்துரை சிவஞானம்

எமது பாடசாலைக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி நல்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அவர்களின் தந்தையாரின் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-4722)

கல்விச் சமூகம்,
கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்.
தர்மபுரம், பரந்தன்.



# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் துர்முகி வருடம் உத்தராயணம் வைகாசித்திங்கள் 07ம் நாள் (20.05.2016) வெள்ளிக்கிழமை பூர்வபக்ஷ சதுர்த்தசி திதியில் சிவபதம் அடைந்த

**பிரம்மஸ்ரீ கணேசக்குருக்கள் ஸ்ரீ ரங்கன் சர்மா** அவர்களின்

ஆன்ம ஈடேற்ற வைபவ கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளது.

- 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை பகல் 9.00 மணிக்கு தசாகம்
- 30.05.2016 திங்கட்கிழமை ஏகோதிஷ்டம், மாசியம்
- 31.05.2016 செவ்வாய்க்கிழமை சபீடீகரணம்
- 01.06.2016 புதன்கிழமை பகல் 12 மணிக்கு கிருஹயக்ஞம் (சமாராதனை) அன்னாரின்

ஆத்ம ஈடேற்ற கிரியைகளில் பங்கு பற்றி பிரார்த்திக்குமாறும் 01.06.2016 புதன்கிழமை மதியம் நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் நினைவாக மஹாகணபதி சதுராவ்ருத்தி தர்ப்பணம் (சமஸ்கிருதநூல்) வெளியிடப்படும்.

இல 51, குருமன்காடு,
வவுனியா (024 222 348) (4781) நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்.



## மகாதேவ ஆச்சிரமம்
## MAHADEVA ASHRAMAM

Regd.No.SVP 104/44 of 29.10.1976 T.P:-024 324 3443

### அறிவித்தல்

22.05.2016 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தில், குருபீடாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக ஆட்சிக்குழு தெரிவுகள் ஏகமனதாக நடைபெற்றன.

| அரங்காவலர் சபை | நிர்வாக உறுப்பினர்கள் |
|---|---|
| 1.ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் | 1.திரு.மா.பேரம்பலம் |
| 2.திரு.ஆ.சிவநாதன் | 2.திரு.சு.திரவியச் செல்வம் |
| 3.திரு.க.இராசரட்ணம் | 3.திரு.பா.குலசிங்கம் |
| 4.திரு.சி.சிவமோகன் | 4.திரு.வி.கிருபானந்தன் |
| 5.திரு.ந.நிமலன் | 5.திரு.க.நித்தியானந்தன் |
| 6.திரு.க.விவேகானந்தன் | 6.திரு.கு.சுமுகலிங்கம் |
| 7.திரு.மு.சிவபாலன் | 7.திரு.வ.கனகரெத்தினம் |
| | 8.திரு.தெ.ரிஷியந்தன் |
| | 9.திரு.அ.வேழமாலிகிதன் |

| நிர்வாக சபை | கணக்காய்வாளர் |
|---|---|
| 1.தலைவர்-ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் | சி.வெற்றிவேலாயுதம் |
| 2.பொருளாளர்-திரு.க.சுகநீதன் | அன்கோ (நல்லூர்) |
| 3.செயலாளர்-திரு.கு.சிறிமுருகன் | |
| 4.உப. செயலாளர்-திரு.கு.வேணுகோபன் | |

**அன்பே சிவம் ஸ்ரீமத் கணேஷானந்த மகா தேவசுவாமிகள் குருபீடாதிபதி**



நீங்கள் நாடக ஆர்வலரா

# சிறந்த நாடகம் ஒன்றில் பங்குபெற விரும்புகிறீர்களா

ஈழத்தின் மூத்த நாடக ஆசிரியர் கலாநிதி குழந்தை மா.சண்முகலிங்கத்தின் தமிழ்மொழி பெயர்ப்பில் Caucasian Chalk Circle கோக்கேசியன் வெண்கட்டி வட்டம் நாடகம் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படவுள்ளது.

இதனை தயாரிப்பதற்கு இலங்கையின் முன்னணி நாடகக்குழுவான "மக்கள்களரி" கலை,கலாசார மன்றம் முன்வந்துள்ளது. யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ரதிதரன் மற்றும் மக்கள்களரியின் கலை இயக்குனர் பாராக்கிரம நிரியல்ல ஆகியோர் களப்பயிற்சிகளிலும் நாடக நெறியாள்கையிலும் பங்குபெறுவர்.


களப் பயிற்சியில் பங்குபற்றுவோருக்கு சான்றிதழ் உண்டு

இதில் நடிப்பதற்கான நடிகர், நடிகையர் மற்றும் இசைக் கலைஞர் தேர்வுக்கான களப் பயிற்சி எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கிறது

தேர்வுக் களப்பயிற்சில் பங்கு பற்ற உங்கள் பெயர் முகவரியை கீழ் உள்ள email முகவரிக்கு அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு குறும் தகவல் அனுப்பவும்

Theatre of the People UNESCO

மின்னஞ்சல் jaffnatamildrama@gmail.com
0776416794




## இலங்கையில் அதிகார மாற்றத்திற்கு பின்னரான அரசியல் கலாசாரம் குறித்து உலக வங்கி மகிழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற அதிகார மாற்றத்தின் பின்னர் நல்லதோர் அரசியல் கலாசாரம் கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக உலக வங்கியின் பிரதிநிதிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சிகள் குறித்து ஆராய்வதற்காக உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது.

இந்த குழுவினர் இலங்கையில் இருந்து திரும்பும் முன்னர் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்தித்து புதிய அரசியல் கலாசாரம் மறறும் பொருளாதார வளர்ச்சிகான சாத்தியங்கள் குறித்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இதேவேளை. இலங்கையின் வளர்ச்சிக்கு கை கொடுக்கும் வகையில் கூடுதலான கடன் உதவிகளை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# அரசு சர்வதேச ஆதரவை தக்கவைக்க தமிழர் பிரச்சினையை கையிலெடுக்கிறது

## அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)


**சர்வதேச அழுத்தங்களுக்கு அஞ்சியும் சர்வதேச ஆதரவைத் தக்கவைக்கவும் மாத்திரமே தமிழர்களின் பிரச்சினைகளை அரசாங்கம் கையில் எடுக்கிறது என ஜே.விபியின தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.**

அதையும் தாண்டி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும். யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் வடக்கு மீட்கப்பட்டதாக அர்த்தமில்லை. அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## புயலில் சிக்கிய வெளிநாட்டு கப்பல் காலி துறைமுகத்திற்கு அருகில்

மாலைதீவுநோக்கிசென்று கொண்டிருந்த கப்பல் ஒன்று நேற்று நண்பகல் புயலில் சிக்கி சேதமடைந்து, காலி துறைமுகத்திற்கு அருகில் வந்துள்ளது.

சிங்கப்பூரில் இருந்து மாலைதீவு நோக்கி வந்த இந்த கப்பல் மெங்கோலியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



கப்பலில் 7 பேர் பணியாற்றுவதுடன் அவர்கள் அனைவரும் இலங்கையர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் கடும் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளதாகவும் கப்பல் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.(இ-10)

### பள்ளிவாசல்கள் உருவாக வேண்டும் பிக்குவின் விருப்பம் இது

வெள்ள அனர்த்த உதவிகள் 90 வீதமானவை பன்சலைகளுக்கு பள்ளிவாசல்கள் மூலமே கிடைத்தன. வெள்ளம் மூலம் முஸ்லிம்களுக்கும் எமக்குமிடையில் நல்லுறவு பலப்பட்டுள்ளது.

பள்ளிவாசல்கள்மேலும்உருவாக வேண்டும். அவற்றுக்கு முதல்கீழ்ந்து மூலையை நானே வழங்குவேன் என கொலன்னாவ சிடினாம லுவே வஜிரதேரர் தெரிவித்துள்ளார். (இ-10)

## அதிக வரவேற்பிற்குரிய நாடாக இலங்கை மாறியுள்ளது-சரத்

சர்வதேச அரங்கில் அதிக வரவேற்பிற்குரிய நாடாக இலங்கை மாறியுள்ளதாக பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

திக்வல்ல தங்தெனிய பூரண விஹாரையில் வெசாக வலயத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே சரத் பொன்சேகா இவ்வாறு கூறியுள்ளார்.

குறித்த நிகழ்வின் போது கருத்து தெரிவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,

இந்த நாட்களில் சர்வதேச தரப்பினரிடையே எமது நாட்டு தலைவர்களுக்கு வரவேற்பு கிடைத்துள்ளது.

எமது நாட்டின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உலகின் வல்லமை மிகு நாடுகளிலிருந்து வரவேற்பு கிடைக்கின்றது. எமது நாடு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றதை முன்னிட்டு நாம் மகிழ்ச்சியடைய முடியும். பின்தங்கிய நிலையில் இருந்த இலங்கை மக்களுக்கு தற்போது சர்வசே அளவில் நல்ல வரவேற்பு இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார். (இ-10)

## கொரிய மொழிப் போட்டிப்பரீட்சை இலங்கையில் இனிமேல் இல்லை

(கொழும்பு)

கொரியாவில் தொழில் வாய்ப்புக்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்காக இலங்கையில் நடத்தப்படும் கொரிய மொழிப் போட்டிப் பரீட்சையை இரத்து செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கணனியில் இணையத்தளம் மூலம் இதற்காக விணணப்பிக்கும் முறைமையொன்றை பிரதியீடாக அறிமுகம் செய்யவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொரிய மனித வள அபிவிருத்தி அமைப்பு விண்ணப்பிக்கும் முறைமையை மாற்றுவதற்கு எடுத்த தீர்மானத்தினால், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இரத்து செய்யும் தீர்மானத்தை எடுத்துள்ளது. (இ-10)

## அரச அதிகாரிகளின் மோசடியை ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச அதிகாரிகள் மோசடிகளில் ஈடுபடுகின்றார்களா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களின் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் தில்ருக்சி டயஸ் தெரிவித்துள்ளார்.

நிவாரணம் வழங்கும் போது ஏற்படும் ஊழல் தொடர்பில் தகவல்கள் ஏதேனும் தெரிந்திருந்தால் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிற்கு அறிவிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## நிவாரணங்களுடன் வந்த பங்களாதேஷ் விமானம்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிவாரணங்களுடன் பங்களாதேஷ் விமானமொன்று நேற்று பிற்பகல் இலஙகையை வந்தடைந்துள்ளது.

மருந்துகள் மற்றும் குடிநீர் என்பன குறித்த விமானத்தின் மூலம் கொண்டுவரப்பட்டன.

குறித்த நிவாரணங்களின் பெறுமதி 100 மில்லியன் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தானிலிருந்து நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற நிவாரணங்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (இ-10)

### மகிந்தானந்தவின் கைது அரசியல் தலையீட்டினால் நிறுத்தப்பட்டுள்ளது

கடந்த ஆட்சியின் போது விளையாட்டுத்துறை அமைச்சராகவிருந்த மகிந்தானந்தஅளுத்கமகே பொலிஸ் நிதி குற்றப்பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்படவிருந்த நிலையில் அரசியல் தலையீடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் இவரது பதவிக்காலத்தின் போது கெரம் போட் பகிர்ந்தளிக்கும் விடயத்தில்முறைகேடு நிகழ்ந்துள்ளதாக குறிப்பிட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரைக்கமைய இவர்கள் இருவரையும் கைது செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கு மீண்டும்வரும்வரை இவர்களை கைது செய்ய வேண்டாம் என்று அரசியல்வாதி ஒருவர் உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## களனி கங்கையில் இரசாயன நச்சுத்தன்மை இராணுவம் தகவல்

நாடு முழுவதும் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக களனி கங்கையின் நீர் இரசாயன நச்சுத் தன்மைக்குள்ளானதாக மேல்மாகாண கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பின் பலபகுதிகளிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்தம் செய்யும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய நிலையில் அதிகமான வீடுகள் சுத்தம் செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வீடுகளே சுத்தம்செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. எவ்வாறாயினும் குறிப்பிட்ட வீடுகளின் வெள்ள நீரில் விசக் கிருமிகளின் தாக்கம் காணப்படுவதால், வீடுகளை சுத்தம் செய்வதற்கு இரசாயன கலவைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த இரசாயன கலவைகள் களனி கங்கையில் கலக்க கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். (இ-10)



# ஊடகங்கள் மீதான சேறு பூசல்கள் மிகுந்த மன உளைச்சலை தருகின்றது

## யாழ்.ஊடக அமையம் வன்மையாக கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் வடமாகாணசபையில் எதிர்கொண்டிருக்கும் சேறு பூசல்கள் மிக மோசமான மன உளைச்சலை தருவதாக அமைந்துள்ளதாக சுட்டிக் காட்டிய யாழ்.ஊடக அமையம், மேற்படி நடவடிக்கைகளுக்கு தமது வன்மையான கண்டனத்தையும் வெள்யிட்டுள்ளது.

இது தொடர்பாக அவ் ஊடக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

**நாலாவது தூணை வலுப்படுத்துவோம்!**

ஜனநாயகத்தின் 4ஆம் தூணான ஊடகத் துறை கடந்த 3 தசாப்தங்களில் 41 தமிழ் ஊடகவியலாளர்களை வடகிழக்கு மாகாணங்களில் ஊடகப்பணிக்காக பலி கொடுத்திருக்கின்றது.

மேலும் பல ஊடகவிய்லாளர்கள், ஊடகப் பணியாளர்கள் காணாமல்போயிரு க்கின்றார்கள். மேலும் பலர் சொந்த நாட்டில் வாழ முடியாத நிலையில் நாட்டை விட்டே வெளியேறி புலம்பெயர் நாடுகளில் ஏதிலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக தமிழ்தேசிய போராட்டம் அகிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் முன்னெடுக்கப்பட்டபோது அரசியல் தரப்புக்களுக்கு ஈடாக மக்களுடன் நின்று அவர்களை வழிப்படுத்தியதில் தமிழ் ஊடகங்கள், மற்றும் ஊடகவியலாளர்கள் ஆற்றிய பணி சொல்லித் தெரியவேண்டியதல்ல. மிக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்ட வடமாகாண சபை தேர்தலிலும் சரி அதன் பின்னராக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சியை கைப்பற்றிய போதும் சரி மக்களிடையே மிகுந்த நம்பிக்கை யினை தோற்றுவிப்பதில் இதே ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருந்த ார்கள்.

இந்நிலையில் தகவல் அறியும் உரிமைக்காக தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் வடமாகாணசபையில் எதிர்கொண்டிருக்கும் சேறு பூசல்கள் மிக மோசமான மன உளைச்சலை தருவதாக அமைந்திருக்கின்றது. போரின் பின்னதாக மக்களது அன்றாட வாழ்வினை கட்டியெழுப்பவேண்டிய தார்மீக கடமை வடமாகாண சபைக்கு இருக்கின்ற போதும் அவ்வாறு நடக்கின்றதா? என்பதை கண்காணிக்கவேண்டிய கடமை ஊடகங்களுக்கே இருக்கின்றன. அந்தவகையில் ஊடகங்களின் அறிக்கையிடல் என்பது தனிநபர் நலன் சார்ந்ததாக என்றுமே இருக்கப்போவதில்லை.

போர்க்காலத்தில் சக ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களை காவு கொடுத்து ஊடகப்பணியாற்றுவதென்பது ஒரு அர்ப்பணிப்பு மிக்க தொழில் என்பதை எவரும் மறுதலிக்க முடியாது. குறிப்பாக புதிதாக ஊடகத்துறைக்கு இளம் சமூகம் வரஅச்சம் கொண்டிருக்கும் இந்த சூழலில் கடந்த 26ம் திகதி இடம்பெற்ற வடமாகாணசபையின் 53 ஆம் அமர்வில் ஊடகவியலாளர்களை தனிப்பட்டரீதியில் தாக்கியும் ஊடக நிறுவனங்களுக்கு வர்ணம் பூசியும் வெளியிடப்பட்ட கருத்துக்கள் வன்மையான கண்டனத்திற்குரியவை. ஊடக அறிக்கையிடுதல் என்பது சொல்வதனை கேட்டு அப்படியே எழுதுவதல்ல அது பல பரிமாணங்களை கொண்டது. ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் வெவ்வேறு பரிமாணங்களில் , மக்களது வாக்குகளை பெற்று தெரிவாகிஅதே மக்களது வரிப்பணத்தில் சலுகைகளை பெற்றுக்கொண்டிருக்கும். மாகாணசபையின் அனைத்து தரப்புக்க ளையும் காண்காணிப்பதும் அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு உண்மைகளை சொல்வதும் ஊடகவியலாளர்களது கடமையாகும்.

ஊடகம் ஒன்றில் அறிக்கையிடப்பட்ட செய்தி தொடர்பில் தமது மறுப்புக்களை தெரிவிக்கவோ தமது நியாயப்பாட்டை தெரியப்படுத்தி நியாயம் பெற்றுக் கொள்ளவோ பல வழிகள் இருக்கின்றன. அதனை விடுத்து வெறுமனே 3 மணி நேரம் கும்பலோடு கும்பலாக சேறு பூசுவது நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.தமக்கெதிரான செய்திகளை அறிக்கையிடுவதாக கருதும் ஊடகங்களை தடைசெய்யக்கோருவது அவர்களது அறிவீனத்தையே வெளிப்படுத்தி நிற்கின்றது. அண்மைக்காலமாக மீண்டும் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் தமிழ் தேசியத்தின் பெயரால் அரசியல் செய்வோர் கெடுபிடிகளை திணித்து வருகின்றமை கவலையை தோற்றுவிக்கின்றது. மேலும் அழுத்தங்கள் ஊடாக ஊடகவியலாளர்களையும், ஊடகங்களையும் அடிபணிய வைப்பதென்பது முன்னைய ஆட்சியாளர்கள் காலத்தில் ஊடக சுதந்திரத்திற்காக போராடிய நாம் மீண்டும் அதே பாதைக்கு செல்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றதாவென்ற சந்தேகத்தை எழுப்புகின்றது.

இத்தகைய ஆரோக்கியமற்ற சமகால அரசியல் போக்கில் வடமாகாணசபையின் அமர்வுகளை அறிக்கையிடுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமா? என்ற கேள்வியும் இப்பொழுது எழுகின்றது.

வடமாகாணசபையின் 53ஆம் அமர்வில் ஊடக நிறுவனங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் இடம்பெற்ற சேறு பூசும் நடவடிக்கைகளை யாழ்.ஊடக அமையம் வன்மையாக கண்டிப்பதுடன் ஜனநாயகத்தின் 4ஆவது தூணான ஊடகத்துறையை வலுப்படுத்த அனைவரையும் கைகோர்க்க அழைப்பும் விடுகின்றது என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-12)

## ரியோ ஒலிம்பிக் போட்டிக்கான ரஷ்ய டென்னிஸ் அணியில் மரியா ஷரபோவா இணைப்பு



ரியோ ஒலிம்பிக் போட்டிக்கான ரஷ்ய டென்னிஸ் அணியில் ஷரபோவா இடம்பெற்றுள்ளார்.

ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா (29) 'மெல்டோனியம்' என்ற ஊக்கமருந்தை பயன்படுத்தியதால், தற்காலிக தடையில் உள்ளார். இதனால் பிரெஞ்ச் ஓபன் தொடரில் விளையாட முடியவில்லை. இவர் மீதான விசாரணையின் முடிவு இன்னும் வெளியாகவில்லை.

இந்நிலையில், பிரேசிலில் நடக்கவுள்ள ரியோ ஒலிம்பிக் போட்டிக்கான (ஓக.,5-21) ரஷ்ய டென்னிஸ் அணியில் ஷரபோவா சேர்க்கப்பட்டுள்ளார். ஒலிம்பிக் டென்னிஸ் விதிப்படி, ஒவ்வொரு நாட்டிலிருந்தும் 4 வீராங்கனைகள் இடம்பெறலாம்.

இதன்படி, ரஷ்ய அணியில் ஷரபோவா, குஸ்னெட்சோவா, கசட்கினா மற்றும் பவ்லி சென்கோவா இடம் பெற்றனர்.

இருப்பினும், போட்டியில் ஷரபோவா பங்கேற்பாரா என்பது குறித்து உறுதியாகத் தெரியவில்லை. (க)

## மதிப்பு மிக்க விளையாட்டு வீரர்கள் விராட் ஹோலி முன்னிலை

இங்கிலாந்து பத்திரிகையான 'ஸ்போர்ட்ஸ் புரோ' இந்த ஆண்டுக்கான மதிப்புமிக்க விளையாட்டு வீரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் இந்திய கிரிக்கெட் டெஸ்ட் அணித் தலைவர் விராட் ஹோலி 3ஆவது இடத்தை பிடித்தார். அவர் பிரபல கால்பந்து வீரர் லியோனல் மெஸ்சி (27ஆவது இடம்) டென்னிஸ் வீரர் ஜோகோவிக் (23ஆவது இடம்), உசைன போல்ட் (31ஆவது இடம்) ஆகியோரை முந்தினார். முதல் இடத்தை அமெரிக்கா கூடைப பந்து வீரர் ஸ்ரீபன் கூரே பிடித்தார். (க)

## வெளியேறியது கொல்கத்தா கண்ணீர் சிந்திய மங்கைகள்



நடப்பு ஐபிஎல் தொடரிலிருந்து கொல்கத்தா அணி பிளே ஓப் சுற்றுடன் (எலிமினேட்டர்) வெளியேறியது.

ஹைதராபாத் அணிக்கு எதிரான பிளே ஓப் சுற்றின் எலிமினேட்டர் போட்டியில் கொல்கத்தா அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

கொல்கத்தா அணி தோல்வியைத் தழுவியதால், அவ்வணியின் சீயர் கேர்ள்ஸ் இருவர் கண்ணீர் சிந்திய காட்சியை அந்த அணியின் உரிமையாளரும் நடிகருமான ஷாருக் கான் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

கொல்கத்தா அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட இவர்களுக்கான சம்பளம் ஒரு போட்டிக்கு இந்திய ரூபாயில் 6000 முதல் 12000 வரை ஆகும்.

அவர்களின் அணி போட்டியை வென்றால் 3000 ரூபாய் போனஸ். கொல்கத்தா அப்போட்டியில் அடைந்த தோல்வியால் அவர்களுக்கு போனஸ் கிடைக்காது என்றாலும், அவர்கள் அணி தோல்வியுற்றதால் அப்பெண்கள் சிந்திய கண்ணீரால் ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகின் அன்பை பெற்றுவிட்டனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

இவர்கள் கண்ணீர் சிந்திய புகைப்படத்தை கொல்கத்தா அணியின் உரிமையாளர் ஷாருக் கான் தனது டுவிட்டர் பக்கத்தில், "லவ்யூ" என்று கூறி நன்றி தெரிவித்துள்ளார். (க)

## நல்லூர்க் கோட்டத்தின் பணிப்பாளராக அன்ரன்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பிரான்சிஸ் சேவியர் அன்ரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜுன் முதலாந் திகதி பதவியைப் பொறுப்பேற்கும் வகையில் இவருக்கான நியமனம் வடக்கு மாகாண கல்வி செயலாளரால் வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற பிரான்சிஸ் சேவியர் அன்ரன் மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை மற்றும் நாவாந்துறை பாடசாலை ஆகியவற்றின் அதிபராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ந)



# கணவன், மனைவி தீயிட்டு தற்கொலைக்கு முயற்சி

## மனைவி உயிரிழப்பு

பிரதி அமைச்சர் ஒருவரின் இணைப்புச் செயலாளர் ஒருவர் தனது மனைவியுடன் இணைந்து தனக்குத் தானே தீயிட்டு தற்கொலை க்கு முயற்சித்துள்ளனர். இதில் தீக்காயங்களுக்குள்ளான பெண் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று உயிரிழந்து ள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இச்சம்பவத்தில் தீக்காயங்களுக்குள்ளான பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பாணந்துறை வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார். தனிப்பட்ட பிரச்சினையொன்றின் காரணமாகவே குறித்த இருவரும் தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

## விண்ணப்பம் கோரல்

சுகாதார போசணை மற்றும் சுதேச அமைச்சின் மருத்துவ தேவைக்காக நிறைவுகாண் தொழில் வல்லுநர்களின் சேவைக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்காக சுகாதாரப்பட்டதாரிகளை இணைத்துக் கொள்ள விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2016-06-25 ஆம் திகதியன்று 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

பயிற்சித் திட்டத்தின் பெயர்

மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்(MLT), மருந்தாளர்(PHARMACY), உடற்சுவற்று சிகிச்சையாளர்(PHYSI OHERAPHY), கதிரியக்கவியலாளர் ( RA DIOGRAPHY)

விண்ணப்ப முடிவு திகதி 2016-06-25 ஆகும். மேலதிக தகவல்களுக்கு 2016.05.27 வெளியான வர்த்தமானி யைப் பார்வையிடலாம். (இ


நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S. சர்மா குருஜீ

076 725 6024

(C-4662)

நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்



MEGA SALE!

மாபெரும் மலிவு விற்பனை

24.05.2016

செவ்வாய்க்கிழமை தொடக்கம்

தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்

❖ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Glass Coffee Table+ Table Fan) இலவசம்.

❖ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை இலவசம்

❖ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Damro Door களுடனும் ஒரு Door Lock இலவசம்.

❖ Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Rice Cookers ஐ அதிகூடிய விலைக்கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.

❖ 32", 40", 50" LED TV களுடன் ஒரு DVD Player இலவசம்.

❖ 25000/= க்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.

❖ Damro, Piyestra, Nilkamal ஆகிய பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.




JAMUNA FURNITURE

181, Navalar Road, Jaffna.

T.P: 021 222 1092, 077 757 4776



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 13/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/5891 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 14செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BSc<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/5411 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 18சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/முகாமையாளர் டுபாய்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/5892 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 50<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/லண்டன் குடியுரிமை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5412 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 79செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்BSc/பொறியியலாளர்<br>தொ.இ: B/5894 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 33<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: 8ஆம் தரம்<br>தொ.இ: G/5416 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 24<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:Diploma, IT லண்டன் PR<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/5896 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 34செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BBA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்ப்டும்<br>தொ.இ: G/5417 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு: 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

28.05.2016

(வைகாசி 15, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு

சப்தமி பின்னிரவு 3.01 மணிவரை

அவிட்டம் பின்னிரவு 1.02மணிவரை

சுபநேரம் 2.52-4.22 மணிவரை

இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

அக்கினி நாள் முடிவு

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி, சுக் | |
| கேது | கிரகநிலை | | |
| சந் | சந்திராஷ்டமம் பூசம், ஆயிலியம் பிற்பகல் 1.21மணிக்கு கும்-சந் | | குரு ராகு |
| | சனி, செவ் | | |

**மீனம்:** திடீர் பயணத்தால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், ஆன்றோர் சந்திப்பு இடம் பெறலாம்.

**மேடம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்,

**இடபம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஒளிமயமான வாழ்க்கைக்கு வழிவகுத்துக் கொள்வீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எதிர்பார்ப்புக்கள் எளிதில் கைகூடும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.

**கடகம்:** பொதுவாழ்வில் ஏற்பட்ட பழிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், உடல்நலம் சீராகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்,

**மகரம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு; வருமானம் திருப்திதரும்.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், விரயங்களைத் தவிர்க்க இயலாமல் போகலாம், குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும்.

**தனுசு:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும்.

**விருச்சிகம்:** தொழில் வாண்மை கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்:** பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உங்களின் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்,

**கன்னி:** பெண்களின் சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.

# வலிகாமம் வலய ஆசிரியர் மாநாடு நேற்று ஆரம்பம்






















வலிகாமம் வலயக் கல்வி அலுவலக ஆசிரியர் மாநாடு நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது.

வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் சந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டின் விருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வட மாகாண இளைஞர் விவகாரம் மற்றும் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை செயலாளர் இராசா இரவீந்திரன்,வட மாகாண கல்வி பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஆசிரியர் மாநாட்டின் ஒரு பகுதியாக வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினால் வலிமை என்ற நூலும் வெளியிடப்பட்டது. (படங்கள்: கு.கஜரூபன்)

## வாகனங்களைப் பெற்றுக் கொள்ளல்

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருள் இதுவரை உரிமைகோரப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த சான்றுப் பொருளை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 6 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் 431(2) இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

கோப்பாய் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்ட சான்றுப் பொருள் MC/1126/F/16 NPQI 2693 இலக்க மூன்று சில்லு மோட்டார் வாகனம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ


## துயர் பகிர்கின்றோம்



அமரர் சின்னத்துரை சிவஞானம்

யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தை **சின்னத்துரை சிவஞானம்** அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(கி-4718)

**கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கம்.**





## பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

2016.05.30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற விருந்த வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஊற்று வலையுலக எழுத்தாளர்கள் மன்றம் யாழ். இலக்கியக் குவியத்துடன் இணைந்து வலைப்பதிவர்களுக்கான கருத்தரங்கு நிகழ்வினை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்தி பருத்தித்துறை வீதியில் உள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடத்தவுள்ளது. (இ-10)

## யாழ். பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களின் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களினால் இணைத் தலைவர்களின் சம்மதத்துடன் அன்றைய தினமே பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்திற்கு அழைப்பிதழ் கிடைக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோரை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ

## 'மகிழ்ச்சி எங்களுக்குள்' யோகாசன கருத்தரங்கு

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பொது மக்களுக்கான மகிழ்ச்சி எங்களுக்குள் எனும் தொனிப் பொருளிலான யோகாசன பயிற்சி கருத்தரங்கு நாளை 29 ஆம் திகதி காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணிவரை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு இப் பயிற்சி பயனுள்ள வகையில் வழங்கப்படவுள்ளது. இப் பயிற்சி கருத்தரங்கில் சிறப்பு வள்வாளராக யோகா ஆச்சாரியார் கலாநிதி கேதீஸ்வரன் (யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்) கலந்து கொள்ளவுள்ளார்.

இப் பயிற்சிக்கு கலந்து கொள்ள ஆர்வமுள்ள அனைவரையும் யோகாசனப் பயிற்சிக்கு பொருத்தமான ஆடையுடன் கலந்து கொள்ளுமாறும் இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 021 205 4224, 076 858 2732 என்ற நிறுவனத்தின் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



சர்வோதய அமைப்பின் இணை அமைப்பான தேசோதய சபையினரால் யாழ்.சர்வோதய மாவட்ட நிலையத்தில் சர்வோதய அமைப்பின் தலைவர் கலாநிதி ஏ.ரீ ஆரியரத்னவால யாழ் எழுத்தாளர் எம்.எப்.எம் இக்பாலுக்கு பொன்னாடை போர்த்தி கொளரவிப்பதையும் "தேசோதயதீபம்" விருதிற்கான கேடயமும் நற்சான்றிதழும் வழங்குவதை படத்தில் காணலாம்.

## தாஜுடீன் படுகொலை வழக்கு

# போலி பிரேதப் பரிசோதனை அறிக்கை குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுடீன் படுகொலை விவகாரத்தை மூடிமறைக்க உதவும் வகையில் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வசிம் தாஜுடீன் படுகொலைச் சம்பவம் வாகன விபத்தாக சித்தரிக்கப்பட்டு மூடி மறைக்கப்படுவதற்கு குறித்த பிரேத பரிசோதனை அறிக்கைகளே காரணமாக அமைந்திருந்தது.

மூன்று சட்டமருத்துவ அதிகாரிகள் இவ்வாறான தவறான பிரேத பரிசோதனை அறிக்கைகளை வழங்கியிருந்தனர்.

தற்போது வசிம் தாஜுடீன் விவகாரம் படுகொலை என்று தெரியவந்துள்ள நிலையில், ஆனந்த சமரசேகர உள்ளிட்ட மூன்று சட்டமருத்துவ அதிகாரிகளுக்கு எதிராக மருத்துவக் கவுன்சில் கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

போலியான மருத்துவ அறிக்கை மூலம் மருத்துவததுறைக்கு களங்கம் விளைவித்தமை மற்றும் அவ்வாறான அறிக்கையொன்றை வழங்கி நீதித்துறையை தவறாக வழிநடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

பெரும்பாலும் அவர்களின் மருத்துவர் அந்தஸ்து இடைநிறுத்தப்பட்டு, சட்ட மருத்துவர் பதவிகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையே உண்மைத் தகவல்களை மூடி மறைத்தல், குற்றமொன்றுக்கு உடந்தையாக இருந்தமை மற்றும் நீதித்துறையை தவறாக வழிநடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் பேராசிரியர் ஆனந்த சமரசேகர உள்ளிட்ட மூன்று சட்டமருத்துவ அதிகாரிகளையும் கைது செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (இ-10)



## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 29.04.2016 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா சிவப்பிரகாசம்

(சிவம்-அம்பாள் ஸ்ரோர்ஸ் அன்ட் குறோசறீஸ், புண்டத்தரிப்பு)

தோற்றம்: 27.04.1940

மறைவு 29.04.2016



அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 27.05.2016 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் சம்பில் துறை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 29.05.2016 நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்,மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

**அம்மன் கோவிலடி,**
**பனிப்புலம்,**
**பண்டத்தரிப்பு.** (4779) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சிவஞானம்

பிறப்பு-1938.03.11

இறப்பு-2016.05.25



அல்லைப்பிட்டி மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட **சின்னத்துரை சிவஞானம்** இயற்கை எய்தினார்.

இவர் காலஞ்சென்றவர்களான அல்லைப்பிட்டி - மண்டைதீவைச் சேர்ந்த சின்னத்துரை- யோகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் நெடுந்தீவு மேற்கை பூர்வீகமாகக் கொண்ட கந்தையா- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர்- யாழ்ப் பாண மாவட்டச் செயலகம்), அன்னலட்சுமி இராசையா (அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, இராசலட்சுமி நல்லையா (மண்டைதீவு), நித்தியலட்சுமி பாலசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செந்தில்நாயகி (பிரான்ஸ்), சிறிதரன் (யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்), சிறீகுகன் (சுவிஸ்), காலஞ்சென்ற சிறீபரன், காலஞ்சென்ற சிறீவரதன் மற்றும் நவநிதி (பிரான்ஸ்),சிறீறங்கன் (பிரான்ஸ்), சிவநிதி (கிளிநொச்சி), சிறீரூபன் (கனடா), காலஞ்சென்ற சிறீஅன்பன், மற்றும் சிறீவினோதன் (பிரான்ஸ்), கலைநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்

ஜெயபாபு, சிவஞானகுமாரி (ஆசிரியர்-கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), பத்மலோசினி (சுவிஸ்) ,கேதீஸ்வரன் (பிரான்ஸ்-முன்னாள் கிராம அலுவலர்), அருட்செல்வி (பிரான்ஸ்), வேலவன் (வன்னி மலர்காடு-முன்னாள் உப தபாலதிபர்) , சத்தியசிவம் (பிரான்ஸ்-முன்னாள் அலுவலக உதவியாளர்-முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்), தர்சினி (கனடா) , கோசலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2016.05.29 ஆம் திகதி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டக்கச்சி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மம்மில் இந்து மயானத்தில் நடைபெறும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
தொ.பே: 077 691 3244,
021 320 7584

தகவல்: சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

(சி-4701)

## 1 ஆம் ஆண்டு நினைவு நாள்

திதி: ஸப்தமி:

28.05.2016



தோற்றம் 21 11 1968

மறைவு 24 05 2015

அமரர் திரு. தனபாலசிங்கம் இலங்கேஸ்வரன்

## 6 ஆம் ஆண்டு நினைவு நாள்

திதி: திரயோதசி

19.05.2016



தோற்றம் 10 02 1940

மறைவு 26 05 2010

அமரர் திரு. தனபாலசிங்கம் பரமேஸ்வரி

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்த அழகான மலர்களே!
விதியெயனும் வழியிலே காலன் வந்து மறித்தானோ உமை!
பதறுதே நெஞ்சம் ... ஆண்டு ஒன்று கடக்கிறதே! பிரிவென்னும் எல்லையில்... தேற்றினாலும் தேறிடா நெஞ்சம் கொண்டு
தேடுகிறோம் உமை...
பொங்கும் பாசமிகு அன்னையுடன் திங்களைத் திகழவைத்தான்
அரன் அடி சேர்ந்திட என்றும் பிரார்த்திப்போம்...
ஓம் சாந்தி...ஓம் சாந்தி... ஓம் சாந்தி.....

அமரர் அவர்களின் ஓராண்டு நினைவினை முன்னிட்டு ,இன்று பி.ப 12.30 மணியளவில் அல்வாய் வடக்கு,குச்சம் ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் அன்னதான நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.தனபாலசிங்கம் குடும்பத்தினர்,
அல்வாய் வடக்கு.

(க-4777)

# யுத்தம் நடைபெற்றதால் பாதிக்கப்பட்டது நாமே



## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(குருமன்காடு)

**அயல் நாடுகள் எமது நாட்டின் வளர்ச்சியைப் பொறுக்காது பிரச்சினைகளை வளர்த்து விட்டார்கள். இதனால் யுத்தம் இடம்பெற்று பாதிக்கப்பட்டது நாமே என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்னாயக்கா தெரிவித்துள்ளார்.**

வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை உறவினர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இன்னும் சில காலங்களில் புனர்வாழ்வு அளிக்கும் இந்தப் பணி முடிவடைந்து விடும். கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து யுத்தத்தில் ஈடுபட்ட 98 சதவீதமானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

எமது நாட்டில் கடந்த 30 வருடகாலமாக யுத்தம் இடம்பெற்றது. அதனால் நாம் இன்று பொருளாதார ரீதியாக பின் நிற்கின்றோம். யுத்தம் இடம்பெற்றிருக்காவிட்டால் எமது நாடு இன்று சிங்கப்பூர் போல் மாறியிருக்கும். இன்று உலகில் பல நாடுகள் ஒற்றுமையுடன் வாழ்ந்து தமது நாட்டை கட்டியெழுப்பியுள்ளனர். நெல்சன் மண்டேலா 20, 25 வருடங்கள் பிரித்தானியர்களினால் துன்புறுத்தப்பட்டவர். ஆனால் அவர் பழிவாங்க நினைக்கவில்லை. கோபம், பகை அவரிடம் இருக்கவில்லை. இதனால் இன்று ஆபிரிக்கா ஒரு சிறந்த நாடாக மாறியுள்ளது.

1947, 1948 ஆம் ஆண்டுகளில் இரத்தம் சிந்தாது அகிம்சை வழியில் நாம் எமது உரிமைகளை பெற்றிருந்தோம். இந்தியா கூட ஒரு காலத்தில் எம்முடன் சமமாக நின்ற நாடு. இன்று பொருளாதாரத்தில் அந்த நாடு வளர்ச்சியடைந்து அதன் நாணயப் பெறுமதி எமது நாட்டு நாணயப் பெறுமதியை விட உயர்ந்துள்ளது. இந்தியாவில் இருந்து எமது நாட்டிற்கு மோட்டார் வாகனம், கார் என பல உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதையே நாம் இன்று வாங்கிப் பயன்படுத்துகின்றோம். இந்தியா பல பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு வேறு வேறு மொழிகள் பயன்படுத்தப்பட்டாலும் அவர்களின் ஒருமைப்பாடு, கூட்டாக செயற்படும் திறன், சாந்தி, சமாதானமே இந்த வளர்ச்சிக்குக் காரணம்.

ஆனால் எமது நாடு ஒரு சிறிய நாடு. சனத்தொகை குறைவு, 9 மாகாணங்கள் தான் இருக்கின்றன. பரந்த பிரதேசங்கள் இருந்த போதும் முள்ளிவாய்க்காலில் 3 இலட்சம் மக்கள் தான் இருந்தார்கள். ஆகவே நிலப்பரப்பு அதிகமாகவுள்ளது. மக்கள் தொகை குறைவு. எமது நாட்டில் பல இடங்களில் வளங்களும் இருக்கின்றன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்ற ஐரோப்பியர்கள் இங்கு வந்தமைக்கு எமது பிராந்திய நிலையமே காரணம். நாம் ஏனைய நாடுகளுக்கு ஒரு முக்கியமான இடத்தில் இருக்கின்றோம். ஒவ்வொரு நாடுகளும் தங்கள் தங்கள் நடவடிக்கைக்கு எம்மை பயன்படுத்துகிறார்கள். வெளிநாடுகளின் தவறான நடத்தைகளால் எமது நாட்டில் யுத்தம் நடந்து இன்று கல்வி, பொருளாதாரம் என பல துறைகளும் சீரழிந்த நிலையில் உள்ளன.

யுத்த அழிவுகள் முள்ளிவாய்க்கால் வரை ஏற்பட்டது. இதற்கு காரணம் என்ன? அயல்நாடுகள் எமது நாட்டின் வளர்ச்சியைப் பொறுக்காது பிரச்சினைகளை வளர்த்து விட்டன. இதனால் நாங்கள் தான் பாதிக்கப்பட்டோம். அரபு நாடுகளில் வளம் இருந்தாலும் அவர்கள் நிம்மதியாக இருக்க முடியவில்லை. ஐ.எஸ் போன்ற பல தீவிரவாத அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் எமது நாட்டில் அவ்வாறான நிலைமை இல்லை. எனவே 2009 மே மாதத்திற்கு பின் இந்த நாட்டில் யுத்தம் முடிவடைந்து பல அபிவிருத்திகள் ஏற்பட்டு வருகின்றன. புனர்வாழ்வு பெற்றவர்களுக்கும் பொருளாதார ரீதியாக உயரக் கூடிய வகையில் பல பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டு பொருளாதார ரீதியாக எமது நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என அவர் தெரிவித்தார்.(2-250)



ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவு இணைந்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 300 குடும்பங்களுக்கு நிவாரண உதவிப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆனந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.கணேசநாதனினால் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டதை படங்களில் காணலாம் . (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

# “பாடசாலை பிள்ளைகளின் பாதுகாப்பு மாதம்” எனும் தொனிப்பொருளில் ஒன்றிணைந்த வேலைத்திட்டம்

(மல்லாவி)

மத்திய கல்வியமைச்சின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ''பாடசாலை பிள்ளைகளின் பாதுகாப்பு மாதம்'' எனும் தொனிப் பொருளில் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக மத்திய கல்வியமைச்சின் செயலாளர் டபிள்யூ.எம்.பந்துசேன அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

தேக ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவர்களாக உயர்ந்த சமூகச் சூழலில் வாழ்வதற்கான கற்றல் நிலைமைகளை ஏற்படுத்தல் அவசியம். அதற்காக ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களின் முன்னோடி வேலைத்திட்டமாக கல்வியமைச்சின் மூலமாக ''பாடசாலைப்பிள்ளைகளின் பாதுகாப்பு மாதம் வேலைத்திட்டம்'' நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை வரை பாடசாலை பிள்ளைகளின் பாதுகாப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதில் முதலாவது வாரம் புகைத்தல்,போதைவஸ்து தடுப்பு வாரம் ''போதைப்புகைத்தலில் இருந்து விடுபடுவோம்,நாட்டை முன்னேற்றுவோம்'' எனும் தலைப்பில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இரண்டாவது வாரம் பிள்ளைகளின் பாதுகாப்பு வாரம் ''பாதுகாப்பான பிள்ளைகள் நாட்டின் உயிர்நாடி'' எனும் தலைப்பில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மூன்றாவது வாரம் பாடசாலை சுகாதார மேம்பாட்டு வாரமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.




நான்காவது வாரம் ஜூன் 26 ஆம் திகதி சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத் தினமாக நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி விடயங்கள் யாவும் நடைமுறைப்படுத்துவதற்கான தரவுகள் அடங்கிய சுற்றுநிருபம் அனைத்துப் பாடசாலைகளுக்கும் வலயக்கல்வித் திணைக்களங்கள் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் இது தொடர்பில் அறிவித்துள்ளார். (2-15)

# சுகாதார அமைச்சிற்கு மேலதிகமாக வழங்கப்பட்ட திணைக்களங்கள் ஏன் மீளப் பெறப்பட்டன

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் விளக்கம்

13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு மொத்தமாக 05 அமைச்சுக்களே ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதலமைச்சரின் அமைச்சிற்கு மேலதிகமாக 04 அமைச்சுக்கள் இயங்குகின்றன. அதாவது சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு, மீன்பிடி அமைச்சு ஆகியனவாகும். எனினும் இந்த அமைச்சுகளுக்கு மேலதிகமாக வேறுபட்ட திணைக்களங்கள் அந்தந்த அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் முதலமைச்சரின் அமைச்சின் கீழ் இயங்கிய சிறுவர் நன்னடத்தை திணைக்களம், சமூகசேவைகள் திணைக்களமும் அதனோடு இணைந்த புனர்வாழ்வு மற்றும் மகளிர் விவகார பிரிவுகள் அடங்கலாக மேலதிகமாக 02 திணைக்களங்கள் கடந்த வருடம் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது முதலமைச்சர் நிதியம் ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைத்துள்ள நிலையில் யுத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்கும் முகமாக முதலமைச்சரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் சமூக சேவைகள் திணைக்களமும் அதனோடு இணைந்த மகளிர் விவகாரம் மற்றும் புனர்வாழ்வு பிரிவுகள் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த 09.05.2016இல் நடைபெற்ற அமைச்சர் வாரியத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட விசேட பிரேரணையின் அடிப்படையிலேயே இவ்வாறு திணைக்களம் மீள் பெறப்பட்டுள்ளது. இதுவழமையான நிர்வாக நடவடிக்கையே தவிர வேறெதுவும் இல்லை என அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# மக்களுக்கான காணியை கையகப்படுத்த முயற்சி துப்புரவு செய்யவிடாமல் மக்கள் முற்றுகை



வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி நிலைய மக்களை குடியேற்றுவதற்காக மக்களுக்கு சொந்தமான காணியை கையகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதால் அக் காணிகளை துப்புரவு செய்ய விடாது மக்கள் முற்றுகைப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

இப்போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி நிலைய மக்களை வீடு கட்டி குடியேற்றுவதற்கான வேலைகள் வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் லைக்கா நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அம்மக்களுக்கான 70 வீடுகளை அமைக்கும் பணி தற்போது இடம்பெற்று வரும் நிலையில் மிகுதி 80 வீடுகளையும் அமைப்பதற்காக சின்னடம்பன், செங்கல்படை குளத்தின் கீழான விவசாய காணிகளை வவுனியா வடக்கு பிரதேச செயலகம் வழங்கியிருந்தது.

குறித்த காணிகள் 1963 ஆம் ஆண்டு முதல் சின்னடம்பன் மக்களால் விவசாய நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டு வந்த வேளை காணிப்பத்திரங்களும் அவர்களிடம் உள்ளது. 1983 ஆம் ஆண்டு செங்கல்படை குளம் உடைப்பெடுத்ததைத் தொடர்ந்தும் யுத்தம் காரணமாக குறித்த விவசாய காணிகள் பயிர்ச்செய்கை செய்யப்படாத நிலையில் இருந்தது. தற்போது அக் குளத்தை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அம் மக்களின் விவசாய காணிகளில் பூந்தோட்டம் மக்களை குடியேற்ற பிரதேச செயலாளர் அனுமதி வழங்கியிருந்தார்.

இதனையடுத்து, குறித்த காணியை லைக்கா நிறுவனம் துப்புரவு செய்ய முற்பட்ட நிலையில் மக்கள் தமது காணிப் பத்திரங்களுடன் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி துப்புரவில் ஈடுபட்டவர்களுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு சென்ற வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, அப்பகுதி கிராம அலுவலர் பிரதீபா ஆகியோர் பிரச்சினையை சமரசம் செய்து வைத்ததுடன் காணி துப்புரவு வேலைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்தினர். இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமாரவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதுடன், இது தொடர்பில் விரைவாக அரச அதிபருடன் பேசி முடிவெடுக்கப்படும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார். (2-250)




# க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான பொதுத்தகவல் தொழில்நுட்ப பரீட்சை விண்ணப்பங்கள் கோரல்

(மல்லாவி)

இலங்கை பரீட்சை திணைக்களத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் 12 இல் தற்போது கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கான பொதுத்தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும் என இலங்கை பரீட்சைத்திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் டபிள்யூ. எம்.என். ஜே.புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இப்பரீட்சை தொடர்பான விண்ணப்பப்படிவங்கள், தரவுப் படிவங்கள்என்பன அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தொடர்பான விபரங்களைப் பூரணப்படுத்தி எதிர்வரும் ஜூன் மாதம் 30 திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக தகவல் தேவைப்படுவோர் எச்.எம்.சரத்சந்திர சிறி, பிரதி பரீட்சை ஆணையாளர், பாடசாலை பரீட்சைகள் ஒருங்கமைப்புக்கிளை, இலங்கை பரீட்சைத்திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்ற முகவரியுடன் அல்லது 011 278 4208, 011 278 4537, 011 318 8350 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.

தொலைநகல் மூலமாக 011 278 4422 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்வதன் ஊடாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார். (2-15)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

கிளிநொச்சி பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.குனறோயன் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி ஆனந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். கணேசநாதன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார். இந் நிவாரண பொதிகளுக்கான அனுசரணையை ஞானம் பவுண்டேசன் அமைப்பினர் வழங்கி இருந்தனர்.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆறு கிராம சேவையாளர் பிரிவில் நடைபெற்றது. இதில் ஆனந்தபுரம் கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த 41 குடும்பங்களுக்கும், அம்பாள்குளம் கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த 29 குடும்பங்களுக்கும், அம்பாள்நகர் கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த 14 குடும்பங்களுக்கும் ஊற்றுப்புலம் கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த 76 குடும்பங்களுக்கும், பாரதிபுரம் கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த 75 குடும்பங்களுக்கும், பிரமந்தனாறு கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த 65 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன. மொத்தமாக 300 குடும்பங்களுக்கு குறித்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.கணேசநாதன், கிளிநொச்சி பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி குனறோயன், பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஞானம் பவுண்டேசன் அமைப்பு உத்தியோகத்தர்கள், குறித்த கிராமங்களின் கிராம சேவையாளர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-312)

# யுத்தத்தின் வடுக்களை சுமந்த சிறுவர்களுக்கு சிவபூமி மனவிருத்தி பாடசாலை ஒரு வரப்பிரசாதம்

## யாழ். இந்தியத் துணைத்தூதுவர் தெரிவிப்பு

(பரந்தன்)

இந்த மண் ஒரு புண்ணிய பூமி, இலக்கிய பூமி, பண்பான பூமி, பணிவான பூமி, அறிவு படைத்த பூமி. இப்படித்தான் நாம் கூறுவதுண்டு. இது எங்கள் ஆழ்ந்த மனதில் இருந்து வரும் வார்த்தைகள் எனக் குறிப்பிட்ட அவர் இந்த சிவபூமி மனவிருத்தி பாடசாலை இந்த சமூகத்திற்கு ஒரு முக்கிய தேவையான ஒன்று. இதற்காக நாம் எம்மாலான எந்த உதவியையும் செய்ய தயாராக உள்ளோம் என யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கனகபுரம் முதலாம் வீதியில் அமைந்துள்ள சிவபூமி மனவிருத்தி பாடசாலை திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த உலகில் தமிழ் தாய்மார்கள் மட்டுமே தங்களுடைய தாலியை விற்றாவது பிள்ளைகளை படிப்பிக்கின்றார்கள். இதுவேறு எந்த தாய்மார்களிடமும் கிடையாது. தங்களுடைய தாலி என்று கூட பாராது அதனை விற்று பிள்ளைகளை படிப்பிப்பார்கள்.

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் இயங்கி வருகின்ற சிவபூமி மனவிருத்தி பாடசாலை தற்போது அதன் கிளையை கிளிநொச்சி கனகபுரத்தில் ஆரம்பித்துள்ளது. யுத்தத்தின் பாதிப்புக்களை அதிகம் சுமந்த வன்னியில் பெரும்பாலான சிறுவர்கள் அதிகளவு உளவியல் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள நிலையில் இந்த பாடசாலையின் ஆரம்பம் ஒரு வரப்பிரசாதமாகவே காணப்படுகிறது.



சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆன்மீக சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், கணேசானந்த சுவாமிகள், பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள், பிரம்மச்சாரி சிவேந்திர சைதன்யா சுவாமிகள், வணபிதா யோசுவா அடிகளார் மற்றும் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2-312)



# பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுடன் பாரவூர்தி கடத்தல்

வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான பாரவூர்தியொன்று பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுடன் கடத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை குருநாகல் மாவட்டத்திலிலுள்ள நாரம்பொல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் குறித்த வாகனம் கடத்தப்பட்டுள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுடன் நாரம்பொல -வாரியபொல வீதியூடாக வவுனியா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பாரவூர்த்தியே கடத்தப்பட்டது. இதன்போது சாரதி, நடத்துநர்கள் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டதுடன் பாரவூர்தி கடத்தப்பட்டது.

இது தொடர்பில் குருநாகல் மாவட்ட நாரம்பொல பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தாம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார்" தெரிவித்துள்ளனர். (2-15)

# மாபெரும் முத்தமிழ் விழா

வன்னி குறோஸ் கலாசார பேரவை நடத்தும் மாபெரும் முத்தமிழ் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் நள்ளிரவு வரை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக பிரபல திரைப்பட நடிகரும் தென்னிந்திய நடிகர் சங்க தலைவருமான நாசர், தென்னிந்திய குணச்சித்திர திரைப்பட நடிகர் மு.சண்முகராசா, த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித்தலைவருமான இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் சோ.மாவை சேனாதிராஜா, ஆகாஷ் குறூப் தலைவரும் நிறைவேற்றுப்பணிப்பாளருமான எஸ். இராம சுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். வடக்கு-கிழக்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் எனப்பலரும் பங்குபற்றவுள்ளனர்.

ஒரேமேடையில் வன்னியின் தெரிவு செய்யப்பட்ட பாரம்பரிய கலைப்படைப்புக்களின் சங்கமமான காத்தவராஜன் சிந்து நடைக்கூத்து, கோவலன் கூத்து, அரிச்சந்திர மயான காண்டம், பண்டார வன்னியன் வரலாற்று நாடகம், சமூக நாடகம் என பல கலை அம்சங்களை உள்ளடக்கியதாக இடம்பெறும்.

பல்வேறு கலை அம்சங்களை தாங்கி, நிகழ்வின் ஆரம்பம் வைத்தியசாலை சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானம் வரை பாரம்பரிய கலாசார பேரணியுடன் இடம்பெறும். (2-281)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்திய உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள்

ஆகஸ்ட் 2016 மாணவர் பெயர், பாடசாலையின் பெயர், வெட்டுப்புள்ளி என்பன வருமாறு.

(நேற்றைய தொடர்ச்சி)

கணிதத்துறை

Y.Piranavan-J/ Hartley College -1.4113,M.Manivannan-J/ Hartley College-1.3869,N.Rudsiga-J/Vembadi Girls High School-1.3821, S.Thuvarakan-J/Jaffna Hindu College-1.3292, K.Sanjeevan-J/ Hartley College-1.3280,M.Mathushan-J/ St.Patrick's College-1.3232, S.Kavisesan-J/Uduppiddy American M. College-1.3155,M.Thushitha-J/ Nelliady Central College-1.3135, K.Karunja-J/Kokuvil Hindu College-1.2804, M.Subirna-J/Vada Central ladies College-1.2747,T.Latani-J/ Idaikkadu M.V-1.2686,V.Sajeepan-J/Kokuvil Hindu College-1.2404, N.Thurusthika-J/Vembadi Girls High School-1.2396,N.Uthayamali-J/ Vembadi Girls High School-1.2073, M.Agashan-J/Jaffna Hindu College-1.2028,S.Satharuban-J/Hartley College-1.1969,P.Ahilrath-J/Kokuvil Hindu College -1.1964, B.Pirunthavan-J/Jaffna College- 1.1946, M.Thayananth-J/ Hartley College-1.1916, K.Kanapalan-J/Jaffna Hindu College-1.1808,F.R.J.Michael Vinushan-J/St.Patrick's College-1.1710, E.Mathynuthan-J/Kokuvil Hindu College-1.1689, W.Thevasuthan-J/ Hartley College-1.1624, S.Saravanan-J/ Jaffna Hindu College-1.1594, K.Kajaruban-J/Hartley College-1.1520, A.Gabaalini-J/Vembadi Girls High School-1.1426,K.Abinayan-J/Nelliady Central College-1.1242, L.Vithusha-J/Vembadi Girls High School-1.1138,U.Jenson-J/Jaffna Hindu College-1.1134,R.Sanujan-J/ Hartley College-1.1020,G.Bavatharany-J/Vembadi Girls High School-1.1003, M.Thuvaraha-J/Vembadi Girls High School-1.0948, M.Antranittasubeska-J/Vembadi Girls High School-1.0877, S.Thayana-Srisomaskanda College-1.0835,T.Delosha-J/Vembadi Girls High School -1.0736, T.Lubeerathan-J/Kokuvil Hindu College -1.0573, S.Dishanthy-J/ uduppiddy Girls College-1.0527, S.Pankajan-J/Jaffna Hindu College-1.0435,S.Rajeevan-J/Jaffna Hindu College-1.0394, S.Kalaivany-J/Vembadi Girls High School-1.0257, N.Thinesh-J/ Hartley College-1.0208,E.Mathynushan-J/Kokuvil Hindu College-1.0141,N.Nihethan-J/Jaffna Hindu College-1.0139, J.A.Jenoshan-J/St.Patrick's College-1.0075, R.Dilaksiyan-J/Jaffna Hindu College-1.0002, S.Suganyan-J/Jaffna Hindu College-0.9967, T.Yathurshan-J/Chavakachcheri Hindu College-0.9936,T.Thuvaragan-J/Jaffna Hindu College-0.9701, V.Thirupara n-J/ Hartley College-0.9431, A.Sinthujan-J/Kokuvil Hindu College-0.9346,P.Gayaani-J/Vembadi Girls High School-0.9328, S.Thiruvel-J/Jaffna Hindu College-0.9145, B.Sentharaselvan-J/Jaffna Hindu College-0.9074,H.Raguraman-J/ Hartley College-0.9020,E.Edmanlukson-J/ Hartley College-0.8994, P.Silaxsha-J/Vembadi Girls High School-0.8954,S.Mathujan-J/Jaffna Hindu College-0.8934,N.Nanthiny-J/ uduppiddy Girls College-0.8763, U.Luxshika-J/Vembadi Girls High School-0.8747,G.Nilakshan-J/St.Patrick's College-0.8701,B.Harikaran-J/ Hartley College-0.8675,S.Tharsana-Srisomaskanda College-0.8591, S.Nerukan-J/Jaffna Hindu College-0.8537,T.Mohanatheesan-J/Kokuvil Hindu College-0.8518,N.Navajyothy-J/uduppiddy Girls College-0.8467, M.Gowthaman-J/Jaffna Hindu College- 0.8397,S.Inkaran-J/Arunodaya College-0.8393,P.piriyanka-J/uduppiddy Girls College-0.8386, R.Vithusan-J/ Hartley College -0.8183, T.Thushyanthan-J/Jaffna Hindu College-0.8161,L.Thineshan-J/Jaffna Hindu College-0.8088, V.Bennet Sujeevan-J/St.Patrick's College-0.7856, P.Suparaj-J/Jaffna Hindu College-0.7845, S.Manchulani-J/Vembadi Girls High School-0.7799,T.Ajinthan-J/Nelliady Central College -0.7752,R.Jasinthan-J/Manipay Hindu College -0.7706, T.Thanusiga-J/Nelliady Central College-0.7557,M.Tharanya-J/Mahayana College-0.7462,N.Piriya-J/ Uduppiddy American M.College-0.7436, K.Navaneethan-J/Jaffna Hindu College- 0.7418,M.Mohanaruby-J/Vada Central ladies College-0.7381, S.Sayanthan-J/Jaffna Hindu College-0.7348,G.Subasthika-J/Vembadi Girls High School-0.7265, B.Janavatsasarma-J/Jaffna Hindu College-0.7261,P.Kandeepan-J/Skandavarodaya-0.7236,J.Nithiya-J/Jaffna Hindu Ladies College-0.7231,S.Keerthana-J/Vada Hindu Girls College-0.7199, S.Shankavi-J/Vembadi Girls High School-0.7118,N.Dinoja-J/Vembadi Girls High School-0.7032, U.Vithushan-J/Chavakachcheri Hindu College-0.6970,P.Iyankaran-J/Victoria College-0.6895,A.Supasthika-J/ Vembadi Girls High School-0.6881, T.Vidyasakaran-J/Kokuvil Hindu College-0.6861,K.Laxshan-J/Kokuvil Hindu College-0.6597,G.Senthooran-J/Jaffna Hindu College-0.6588, M.Paviththyra-J/Chithambara College-0.6587,S.Anushan-J/Vaddu Hindu College-0.6341,K.Prasanth-J/Jaffna Hindu College-0.6210,T.Senthan-J/ Hartley College-0.6016,S.Majuran-J/ Hartley College -0.6003, N.Senthuran- J/Jaffna Central College-0.5893, B.Sancheepan-J/Vigneswara College-0.5748, S.Thushanth-J/ Hartley College-0.5723,K.Subahary-J/Jaffna Hindu Ladies College-0.5622, S.Prahalathan-J/Jaffna Hindu College-0.5528,T.Subinthan-J/Uduppiddy American M.College-0.5395, S.Arththigayini-J/Nelliady Central College-0.5162,K.Kirusanth-J/Nelliady Central College-0.5110,M.Kanista-J/Vada Hindu Girls College-0.5096, S.Venujan-J/Jaffna Hindu College-0.5092, S.Sujan-J/Hartley College-0.5091, K.Minuja-J/Manipay Ladies College-0.5070,T.Athavan-J/Jaffna Hindu College-0.5063,S.Kajan-J/Jaffna Hindu College-0.4911, U.Lavaneethan-J/Kokuvil Hindu College-0.4889, T.Mithulajini-J/Jaffna Hindu Ladies College-0.4882,A.Yohancy-J/Holy Family Convent-0.4863, T.Tharshayan-J/ Hartley College-0.4737, A.Renoshan-J/ Hartley College-0.4729, U.Jenoshan-J/ Hartley College-0.4702, M.Labaskar-J/Uduppiddy American M.College-0.4561,T.Thuthikan-J/Jaffna Hindu College-0.4530,S.Kajalan-J/Victoria College-0.4452,U.Niruja-J/Methodist Girls high school-0.4309, S.Srirathan-J/ Hartley College 0.4193, T.Tharmanathi-J/Vembadi Girls High School-0.4127,S.Arabi-J/Vembadi Girls High School -0.4083, V.Mithurshan-J/Uduppiddy American M.College-0.3958,R.Kajanthan-J/Chavakachcheri Hindu College-0.3881, R.Rakxana-J/Vembadi Girls High School-0.3857,S.Suthakar-J/Vigneswara College-0.3763, N.Umasuthan-J/ Hartley College-0.3748, K.Kugapriya-J/Uduvil Girls College-0.3576, J.Jeyantha-J/Methodist Girls high school-0.3433,S.Ajanthan-J/ Hartley College-0.3316,V.Vijeena-J/Manipay Ladies College-0.3238,S.Vaanathy-J/ Chavakachcheri Hindu College-0.3220,N.Sasisekaran-J/Jaffna College- 0.3147,N.Pakeerathan-J/Jaffna Hindu College-0.3131,M.Mathusha-J/Vada Central ladies College-0.3104,S.Sarangan-J/Jaffna Hindu College-0.3071,S.Srisankavi-J/Methodist Girls high school-0.2915, T.NiShan- J/ Jaffna Hindu College-0.2844, T.Jeevitha-J/Vada Central ladies College-0.2736,N.Apiramee-J/Kokuvil Hindu College-0.2660,T.Kugajenan-J/ Hartley College-0.2615, G.Mathurathan-J/Kokuvil Hindu College -0.2584, M.Nithursan-J/Jaffna Hindu College-0.2556,R.Uthajapavan-J/Jaffna Hindu College -0.2550, J.Lathan- J/Jaffna Central College-0.2507, K.Arukumaran-J/Jaffna Hindu College-0.2468, S.Thevapriyan-J/Kokuvil Hindu College -0.2407, R.Ramakrishnan-J/ Hartley College-0.2399, T.Majura-J/ Methodist Girls high school-0.2356, T.Keerthika-J/Vembadi Girls High School-0.2332,S.Janarththan-J/ Jaffna Hindu College-0.2317, J.Sinthukan-J/Nelliady Central College-0.2288,N.Bamini-J/Vada Central ladies College-0.2271, P.Senthooran -J/ Hartley College-0.2123, R.Piralansa-J/Chavakachcheri Hindu College -0.2119, R.Samya- J/Nelliady Central College-0.1997, S.Pakeeharan-J/Jaffna Hindu College- 0.1971, T.Thanushiyan-J/Jaffna Hindu College-0.1944,V.Rajamithiran-J/Jaffna Hindu College-0.1865, B.Seevakan-J/Kokuvil Hindu College-0.1862, N.Manoja-J/Methodist Girls high school -0.1783, P.Kajakokulan-J/Manipay Hindu College -0.1752, A.Krishnavenugan-J/ Hartley College- 0.1722,P.Showan-J/ Hartley College-0.1679,M.Mathuranthaki-J/Chavakachcheri Hindu College-0.1672, T.Thivakaran-J/Mahayana College-0.1649,K.Amutha-J/Vembadi Girls High School-0.1640, S.Jeyakeethan-J/ Hartley College-0.1627, S.Araby- J/Vembadi Girls High School-0.1572, T.Thanaraj-J/ Kokuvil Hindu College- 0.1549, J.Kugapiriyan-J/Kokuvil Hindu College-0.1539, N.Elankeeran-J/ Hartley College -0.1509,M.E.R. Ronishan-J/ Hartley College-0.1503, A.Mathusan-J/ Hartley College-0.1359, S.Gowthamaniyar-J/Uduppiddy American M.College-0.1343, P. Sasitharan-J/Victoria College-0.1339,S.Vinoji-J/Vembadi Girls High School-0.1289,A.Nirojini-J/ Vembadi Girls High School-0.1226, A.Tilakshan-J/Jaffna Central College-0.1202,S.Gobitha-J/Vembadi Girls High School-0.1142, R.Viththakan-J/Jaffna Hindu College-0.1132, Y.Suhaithan-J/ Hartley College-0.1109, J.Athithan-J/Jaffna College-0.1104,M.Praveen-J/Jaffna Hindu College-0.1057,R.Nijanthan-J/Jaffna Hindu College-0.0985, I. Thishan- J/Jaffna Hindu College-0.0927, B.Sarangiya-J/Jaffna Hindu Ladies College-0.0912, S.Gnanakeerththanan-J/ Hartley College-0.0819, T.Komagam-J/ Hartley College-0.0816,A.Nirojan-J/Kokuvil Hindu College-0.0801,A.Lavanya-J/ Vembadi Girls High School-0.0780, U.Kirushanthy-J/Methodist Girls high school-0.0743,A.Ajith-J/Jaffna Central College-0.0677,R.Yanaransani J/Kokuvil Hindu College-0.0676,C.Kugajini-J/Kokuvil Hindu College-0.0672,M.Piraveen-J/Kopay Christian College-0.0635, A.Arshana-J/Methodist Girls high school-0.0542,P.Saranka-J/Uduvil Girls College-0.0540, N.Sujeevan-J/ Manipay Hindu College-0.0447, R.Divya-J/uduppiddy Girls College-0.0370,J.Jathursha-J/Methodist Girls high school-0.0366, N.Naveen-J/Jaffna College-0.0260, K.Mishanthan-J/Idaikkadu M.V-0.0250, A.Kajanan-J/Jaffna Hindu College-0.0148,P.Banushan-J/ Hartley College-0.0142, V.Luxsiga-J/Methodist Girls high school-0.0106, S.Senthooran-J/ Hartley College-0.0072, T.Kartheepan-J/ Hartley College-0.0030, G.Janushan-J/ Hartley College-0.0027, M.Thanuja-J/ Vembadi Girls High School-0.0024, K.Lakshini-J/Meesalai Veerasingam Central College- 0.0012.

(தொடரும்...)

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—74

# மண்ணை வளமாக வைத்திருப்பது காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்க உதவும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளை நாம் நேரடியாக சந்தித்திருக்கும் காலமிது.

எமது நாட்டில் எதிர்பாராத விதமாக நடந்து முடிந்த வெள்ளப்பெருக்கும் அதனால் மக்கள் பட்ட இடர்களும் சொல்லிலடங்காது. குறிப்பாக வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள்,பாடசாலை செல்லும் பிள்ளைகள் என அனைவருக்கும் இறைவன் ஆறுதல் அளிப்பானாக. மண்சரிவினால் உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை அனைவரும் செலுத்தும் இந்நாளில் இழந்த உறவுகளை எண்ணி தவிக்கும் அனைவருக்கும் இயற்கை பேரிடரின் வலியை விரைந்து போக்குவது நல்லுள்ளம் கொண்ட அனைவருக்குமான கடனாகும்.

காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு நாம் அனைவரும் முகங்கொடுக்க தயாராக வேண்டும். எமக்கிடையிலான போட்டி பூசல்களை ஒருபக்கம் தள்ளி வைத்து விட்டு விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடனும் மனிதாபிமானத்துடனும் நாம் உறவுகளை இழந்த, உடைமைகளை இழந்த அனைவருக்கும் உதவ முன்வர வேண்டும். உதவுகரங்கள் பலவாறாக இயங்கினாலும் இன்னமும் பலருக்கு உதவிகள் சென்றடைய வில்லை என்ற ஆதங்கமும் வெளிப்படுகின்றது.

இந்த இடரிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதில் திட்டமிட்டு செயற்பட்ட அதிகாரிகள் தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் மனிதநேய அமைப்புக்களுக்கு நன்றி செலுத்துதல் வேண்டும். குறிப்பாக முகப்புத்தகம் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் செய்யப்பட்ட ஒன்றிணைப்பு தேவைப்பட்டநேரத்தில் அவசியமறிந்து செய்யப்பட்டதாக கருதமுடியும். எந்த தொழில் நுட்பத்தையும் சரியான வழியில் பயன்படுத்தினால் அது அனை வருக்கும் பயன் தருவதாக அமையும். தொழில் நுட்பத்தை நல்லநோக்கத்தில் பயன்படுத்த வேண்டும். அதற்காகவே அவை கண்டு பிடிக்கப்பட்டி ருக்கின்றன என்பதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

காலநிலை மாற்றம் விவசாய செய்கையை பாரியளவில் பரிதவிக்கச் செய்திருக்கின்றது. இனிவருங்காலங்களில் என்ன நடக்கும் என்பதை அனுமானிக்க முடியாதவாறு காலநிலை மாற்றமடையத் தொடங்கியிருக்கின்றது. எமது நாட்டில் இவ்வாறான மாற்றம் எமது விவசாய வளத்தை பாதிக்காதவாறு நாமும் அதற்கேற்றாற் போல புதிய தொழில்நுட்பங்களை உட்புகுத்தி விவசாய. செய் கையில் மாற்றத்தினை ஏற்படுத்துதல் வேண்டும். இந்தமாற்றம் சமகால விவசாய பிரச்சினைகளை தீர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். இதற்காக நிபுணர்களின் அனுசரணையை பெற்று விவசாய செய்கையில் வேண்டிய மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான சிபார்சுகளை விவசாய மற்றும் சூழல் சார்ந்த அமைச்சுக்கள் முக்கியமாக ஈடுபடல் வேண் டும். காலநிலை மாற்றத்தை நுண்ணியளவில் தீர்க்கமாக அவதானிக்கும் உபகரணங்க ளின் உதவி இதற்காக தேவைப்படும். மேலும் கணனி மயப்படுத்தப்பட்ட தன்னியக்க பொறிமுறை மூலம் கால நிலைக் காரணிகளான வளிமண்டல வெப்பநிலை, ஈரப்பதன், மழைவீழ்ச்சி, காற்றின் வேகம், கதிர்வீச்சின் தன்மை, ஒளி கிடைக்கும் அளவு, மேலும் இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் துல்லியமாக கணிக்கப்பட்டு மக்களுக்கு அவற்றின் மாற்றங்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்பன பற்றி எதிர்வு கூறப்படல் வேண்டும்.

இதற்காக வளிமண்டல திணைக்களமும் விவசாய திணைக்களமும் இணைந்த பொறிமுறை ஏற்படுத்தப்பட்டால் காலநிலைமாற்றம் பற்றி விரைவான தகவலை மக்களுக்கு குறிப்பாக விவசாயப் பெருமக்களுக்கு தெரியப்படுத்த கூடியதாயிருக்கும். மேலும் காலநிலை மாற்றத்தை கணிப்பதற்கான நிபுணர் களையும் இத்தேசம் உருவாக்க வேண்டும். வானில் செலுத்தப்பட்டுள்ள விண்கலங்களின் உதவியுடன் பெறப்படும் தகவல்கள் இக்காலநிலை மாற்றங்களை துல்லியமாக அனுமானிக்க உதவியாக இருக்கும். அபரிமிதமான விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் பயன்பாட்டை எமது பிரதேசத் தில் விவசாயத்தையும் தொழில் துறையையும் இன்னும் மக்களையும் காப்பாற்றுவதற்காக பயன்படுத்துதல் வேண்டும்.

விவசாய திணைக்களத்தின் தகவல்களும் பரிந்துரைகளும் சமகாலநிலைமைகளை அவதானித்து அதற்கேற்ப மாற்றியமைத்து விவசாய செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தாதளவுக்கு பரிந்துரைகளை மாற்றியமைக்க முயற்சிக்க வேண்டும். இந்த மாற்றம் அவசி யமானதாகும். காலம் மாறிய மழை அதுவும் கனமழை, பின்னர் தொடர்ச்சியான வரட்சி என மாற்றமடைந்து வரும் கால நிலையில் விவசாய செய்கையினை முன்பு போல திட்டமிட முடியாது. பருவம் மாறிப் பெய்யும் மழை பருவத்தையே முழுவதுமாக மாற்றி விட்டது. இது ஆக்கத்துக்கான மாற்றம் போல தெரியவில்லை. அழிவுக் கான மாற்றமாக மாற்றமடைய முன்பு நாம் முந்திக் கொள்ள வேண்டும். மக்களையும் குறிப்பாக விவசாய பெருமக்க ளையும் இந்த மாற்றம் பற்றி உணரவைத்து அதன் மூலம் மாற்றத்தினால் பாதிப்படையாத விவசாய செய்கை முறைகளை உள்வாங்க அறிவுறுத்த வேண்டும்.

விவசாய செய்கையில் காலநிலை முக்கிய தாக்கத்தைச் செலுத்துவதனால் இந்த விடயத்தில் நாம் இன்னும் அக்கறை செலுத்த வில்லையென்றால் பின்பு அதன் பின்னரான அழிவு களை தவிர்க்க முடியா திருக்கும்.

குறிப்பாக மண்ணை வளமாக வைத்திருப்பது இங்கே அவசியமானதாகும். மண்ணின் சத்துக்களின் வளமும் நன்மைதரும் நுண்ணங்கிகளின் வளமும் நன்றாக இருந்தால் மட்டுமே இவ்வாறான நெருக்கடியான சூழலில் பயிர்ச் செய்கையை நாம் ஓரளவுக்கேனும் காப்பாற்ற முடியும்.



விவசாய செய்கையில் நீர் அதிகமாக சேரக்கூடிய இடங்களில் இடப்படும் கூட்டெருவின் அளவினை குறைப்பது நல்லது. நன்றாக உக்காத கூட்டெருவை இடுவதனை தவிர்ப்பதும் நல்லது. மழைவீழ்ச்சியின் அளவைப் பொறுத்து விதையெறிவதும் திட்டமிடப்படல் வேண்டும். பின்னர் தொடர்ச்சியான வரட்சி வரும் போது பயிரினால் தாக்குப் பிடிக்க முடியாது போய் விடும். மண்ணை வளமாக வைத்திருப்பதில் நன்மை தரும் நுண்ணங்கிகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். அதற்கான சிறந்த சூழலை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். வரு முன் காப்பது என்றுமே சிறந்ததாகும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 91

# நான் பிரதமர் இல்லை நாட்டின் பிரதான சேவகன்

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

நான் பிரதமர் இல்லை. நாட்டின் பிரதான சேவகன். எனது 2 ஆண்டுகால ஆட்சியின் செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு விளக்கம் அளிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றும் நாடு முழுவதும் மத்திய, மாநில அரசு வைத்தியர்களின் ஓய்வு வயது 65 ஆக உயர்த்தப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

மத்தியில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பதவியேற்று 2 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதையொட்டி உத்தரப் பிரதேசம் சஹறரன்பூரில் நேற்று நடந்த விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது,

எனது ஆட்சியில் மாநில அரசுகளுக்கு 65 சதவீத நிதி வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு 35 சதவீத நிதியை மட்டுமே பெற்றுள்ளது. இது மிகப்பெரிய சாதனை.

நாடு மாற்றத்தை சந்தித்து வருகிறது. ஆனால் சிலரின் வாழ்க்கையில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை. அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அடிப்படை வசதிகளுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

புதிய பாடசாலைகள் திறப்பது, வைத்தியசாலைகள் கட்டுவது, வீதிகள் அமைப்பது ஆகிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதன்மூலம் ஏழைகளின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படும்.

விவசாயிகளின் பிரச்சினைகளை மத்திய அரசு நன்கு அறிந்து வைத்துள்ளது. அவர்களின் முகத்தில் துயரை துடைக்க உறுதிபூண்டு செயற்படுகிறோம்.

கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை சில சர்க்கரை ஆலைகள் முறையாக வழங்குவது இல்லை என்று புகார்கள் எழுந்துள்ளன. அந்த சர்க்கரை ஆலைகள் உடனடியாக நிலுவைத் தொகையை வழங்கவேண்டும். இல்லையெனில் கடும் பின்விளைவுகளை சந்திக்க நேரிடும்.

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அதற்கான திட்டங்களை மும்முரமாக செயற்படுத்தி வருகிறோம்.

கடந்த 2 ஆண்டுகளில் மத்திய அரசு மீது சிறு ஊழல் புகார்கூட எழவில்லை. எதிர்க்கட்சிகளால்கூட எங்கள் மீது குற்றம் சுமத்த முடியாது. எனது அரசில் ஏதாவது ஒரு சிறு தவறு நிகழ்ந்தால் அது தொலைக்காட்சிகளில் 24 மணி நேரமும் விமர்சிக்கப்படுகிறது. இதுபோன்ற விமர்சனங்களை நான் வரவேற்கிறேன். அரசின் ஒவ்வொரு நாள் செயற்பாடு, ஒவ்வொரு பைசாவும் கண்காணிக்கப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம்.

சமூகத்தில் பெண்கள் முன்னேறவில்லை என்றால் இந்த நாடு முன்னேறாது. எனவே பெண் குழந்தைகளின் நலனுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளிக்கிறது.

நாடு முழுவதும் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. சில மாநிலங்களில் அரசு வைத்தியர்களின் ஓய்வு வயது 60 ஆகவும் வேறு சில மாநிலங்களில் 62 ஆகவும் உள்ளது. நாட்டில் புதிதாக வைத்தியசாலைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. அதற்கேற்ப வைத்தியர்களின் எண்ணிக்கை இல்லை. போதிய வைத்தியர்கள் இல்லாமல் ஏழை நோயாளிகள் பாதிக்கப்படக்கூடாது.



ஏனவே நாடு முழுவதும் மத்திய, மாநில அரசு வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்களின் ஓய்வு வயது 65 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு இந்த வாரமே மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கும்.


ஏழை கர்ப்பிணிகளின் நலனுக்காக இந்திய மருத்துவர்கள் ஒவ்வொரு மாதமும் 9ஆம் திகதி இலவசமாக சிகிச்சை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதன் மூலம் ஓராண்டில் 12 நாட்கள் ஏழை கர்ப்பிணிகளுக்கு இலவசமாக சிகிச்சை கிடைக்கும்.

நாடு முழுவதும் ஒரு கோடி குடும்பங்கள் சமையல் ஹாஸ் மானியத்தை விட்டுக் கொடுத்து ஏழைகளின் வீடுகளில் ஹகாஸ் அடுப்பை எரியச் செய்துள்ளன. அதேபோல வைத்தியர்களும் மாதம் ஒரு நாள் ஏழை கர்ப்பிணிகளுக்கு சேவையாற்ற வேண்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

பாரதச் செய்தி

## காந்தி கொலை; விசாரணைக்குழு அமைக்க கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்



(டில்லி)

மகாத்மா காந்தியின் கொலை தொடர்பில் விசாரிக்க விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என மும்பை உயர்நீதிமன்றத்தில் நேற்று பொதுநல வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி கடந்த 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி நாதுராம் கோட்சேவால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த கொலை தொடர்பாக கோட்சே உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டதுடன், கொலை தொடர்பாக ஜே.எல்.கபூர் தலைமையில் விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இருப்பினும், ஜே.எல்.கபூர் குழுவால் காந்தியின் கொலைச்சதி தொடர்பான பின்னணி முழுவதையும் வெளிக்கொணர முடியவில்லை எனவும், புதிய விசாரணைக்குழு ஒன்றை அமைத்து காந்தியின் கொலையை விசாரிக்க வேண்டும் எனவும் மும்பையை சேர்ந்த அபினவ் பகத் அமைப்பின் அறங்காவலர் பங்கஜ் பட்னிஸ் மும்பை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்துள் ளார்.

இது குறித்து அவர் கையளித்த தனது மனுவில்,

'7 தோட்டாக்கள் கொண்ட துப்பாக்கியால் காந்தி சுடப்பட்டதாகவும், இதில் 3 தோட்டாக்கள் காந்தியின் உடலை துளைத்த நிலையில் மீதமுள்ள 4 தோட்டாக்கள் சம்பவத்தின் போது பறிமுதல் செய்யப்பட்ட துப்பாக்கியில் இருந்ததாக அரசு தரப்பு கூறியுள்ளது.

ஆனால் காந்தியின் உடலில் 4 தோட்டாக்கள் இருந்துள்ளன. அப்படியானால் அங்கு கோட்சேயை தவிர வேறு கொலையாளிகள் யாரும் இருந்தனரா என்பதை கண்டறிய வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

குறித்த மனு தலைமை நீதிபதி டி.எச்.வகேலா தலைமையிலான அமர்வு முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளதையடுத்து, எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

## பிரதமருக்கு 'ஜெ' எழுதும் கடிதங்கள் குப்பைக் கூடைக்குத்தான் செல்கின்றன

### சுவாமியின் சர்ச்சைக்குரிய பேச்சு

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, பிரதமர் மோடிக்கு எழுதும் கடிதங் கள் அனைத்தும், மருத்துவ நுழைவுத் தேர்வு விவகாரம் உள்ளிட்டவையும் குப்பைக் கூடைக்குத்தான் செல்கின்றன என்று பாஜக மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிர மணியன் சுவாமி சர்ச்சைக்குரிய விதத்தில் பேசியுள்ளார்.

பாஜக மூத்த தலைவராக இருந்த சுப்பிரமணியன் சுவாமி, மாநிலங்களவை உறுப்பினராக பொறுப்பேற்றுக் கொண்ட நாள் முதல், மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்து வருகிறார்.

ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜனை நீக்கக் கோரி தொடர்ந்து பேசி வரும் சுப்பிரமணியன் சுவாமி, தமிழக முதலமைச்சர்ஜெயலலிதா எழுதும் கடிதம் குறித்து கருத்துக் கூறியுள்ளார். அதில், பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதுவதில் முதலமைச்சர் ஜெயலலிதா கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

ஆனால், அவர் எழுதும் கடிதங்கள் பெரும்பாலும் குப்பைக் கூடைக்குத்தான் செல்கின்றன. ஏற்கனவே ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்யும் விவகாரம் குறித்தும் ஜெயலலிதா கடிதம் எழுதினார். தற்போது மருத்துவ நுழைவுத் தேர்வு விவகாரம் தொடர்பாகவும் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். இதுவும் குப்பைக் கூடைக்குத்தான் செல்லும் என்று சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார். (இ-10)

## தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து

### கொதிகலன் வெடித்து 5 தொழிலாளர்கள் பலி; 102 பேர் படுகாயம்

மும்பை தொழிற்சாலையில் கொதிகலன் வெடித்த விபத்தில் 5 தொழிலாளர்கள் பலியானார்கள்.

மும்பையை அடுத்த தானே மாவட்டம் டோம்பிவிலி கிழக்கில் உள்ள ஒரு இரசாயன தொழிற்சாலையில் நேற்று முன்தினம் காலை ஒரு ஹாஸ் சிலிண்டர் பயங்கர சத்தத்துடன் வெடித்தது. அடுத்த சில நொடிகளில் மற்ற ஹாஸ் சிலிண்டர்களும் ஒன்றன்பின் ஒன்றாக வெடித்து சிதறின.

தொழிலாளர்கள் தப்பிக்க முயற்சி செய்வதற்குள் அங்கிருந்த ராட்சத இரசாயன கொதிகலன் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதில் கொதிகலனின் மேற்கூரை அங்கிருந்து பல மீற்றர் தூரத்திற்கு தூக்கி வீசப்பட்டது. மேலும் தொழிற்சாலை கட்டடமும் தரைமட்டமானது.

இதில் வேலை செய்து கொண்டு இருந்த பலர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி கொண்டனர். இந்த விபத்தால் 4 கி.மீ. சுற்றளவில் உள்ள பகுதிகள் அதிர்ச்சியில் குலுங்கின. அடுக்குமாடி கட்டடங்கள், கடைகளின்கண்ணாடிகள் உடைந்து சிதறின. அந்த பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் கண்ணாடிகளும் உடைந்தன.

தொழிற்சாலை அருகில் உள்ள மற்ற தொழிற்சாலை கட்டடங்களும் பலத்த சேதம் அடைந்தன.

தகவல் அறிந்த தீயணைப்பு படையினர் 20இற்கும் மேற்பட்ட வாகனங்களில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.


விபத்தில் சிக்கிய தொழிலாளர்கள், ஊழியர்கள் 80இற்கும் மேற்பட்டோர் மற்றும் பொதுமக்கள் 20 பேரை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டு சென்றனர்.

இதில் சிகிச்சை பலனின்றி 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். மேலும் 102 பேர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதில் 7 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (இ-10)

# சீனாவின் நிதி உதவியுடன் இலங்கையில் சிறுநீரக நோயாளிகளுக்கான வைத்தியசாலை

## 600 மில்லியன் யுவான்கள் ஒதுக்கீடு

இலங்கையில் சிறுநீரக நோயாளிகளுக்கான சிறப்பு வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு, 600 மில்லியன் யுவான்களை (சீன பணம்) சீனா வழங்கியுள்ளது.



நேற்று முன்தினம் குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளதோடு, இது தொடர்பான இருதரப்பு ஒப்பந்தத்தில் சீனாவிலுள்ள இலங்கைத் தூதுவர் கருணாசேன கொடித்துவக்கு இலங்கையின் சார்பாக கையெழுத்திட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சீன ஜனாதிபதி ஷீ ஜின் பிங்க் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பிரதிபலனாகவே இந்த உதவி கிட்டியுள்ளது. (இ-10)

# 80 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணனி



நாடளாவிய ரீதியிலுள்ள பல்கலைக்கழகங்களின் 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மடிக் கணனிகளை வழங்கும் அரசாங்கத்தின் செயற்றிட்டம் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்த உத்தியோகபூர்வ நிகழ்வில் மாணவர்களுக்கு மடிக்கணனிகள் பிரதமரால் கையளிக்கப்பட்டன.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வரவு செலவு திட்ட வாக்குறுதிக்கமைய இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மடிக்கணனியைப் பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்காக 75ஆயிரம் ரூபா நிதி இலகு கடனாக வழங்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியிலுள்ள பல்கலைக்கழகங்களின் 80ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இந்த மடிக்கணனிக்கான கடன் வழங்கப்படுவதுடன் மாணவர்கள் இந்த 75ஆயிரம்ரூபா கடனை மூன்று வருடத்திற்குள் மீள செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வங்கிக் கடன் மூலம் மாணவர்களுக்கு இத்தொகை வழங்கப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் தமக்கு விருப்பமான மடிக்கணனியைத் தெரிவுசெய்து கொள்ள வழி வகுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மேற்படி உத்தியோகபூர்வ நிகழ்வில் உரையாற்றிய உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டி. சி. திசாநாயக்க தற்போதைய அரசாங்கம் உயர் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இந்த உத்தியோகபூர்வ நிகழ்வில் உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரூ, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பல்கலைக்கழகங்களின் வேந்தர்கள், உபவேந்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ரூ.40கோடி பெறுமதியான ஒபாமாவின் புதிய பங்களா



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக் காலம் இந்த ஆண்டு இறுதியுடன் முடிவடைகிறது.

இதனால் அவர் தற்போது வசிக்கும் அமெரிக்க ஜனாதிபதியின் மாளிகையை விட்டு வெள்ளை மாளிகை அருகில் புதிதாக வாங்கியுள்ள 40 கோடி ரூபாய் மதிப்பிலான பங்களாவிற்கு குடிபெயரவுள்ளார்.

ஒன்பது படுக்கை அறைகளுடன் பிரமாண்டமாகவும், நவீன வசதிகள் கொணடதாகவும் இந்த பங்களா வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒபாமாவின் புதிய வீடு வோஷிங்டனில் கோடீஸ்வரர்களில் வசிக்கும் ராக் க்ரீக் பூங்கா பகுதியில் அமைந்துள்ளது. இங்குதான் அமெரிக்காவின் முக்கிய தலைவர்கள், இராஜதந்திரிகளின் வீடுகள் அமைந்துள்ளன. இந்த பகுதி வெள்ளை மாளிகையில் இருந்து வெறும் மூன்று கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

சிகாகோவில் ஒபாமாவிற்கு சொந்தமாக வீடு உள்ளது என்றாலும், மகளின் படிப்பு முடியும் வரை குடும்பத்துடன் வோஷிங்டனில் வசிக்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. (இ-10)

# குப்பை என நினைத்து ஒதுக்கிய கிரீடத்தின் மதிப்பு 67 லட்சம் ரூபா

பிரித்தானியாவில் குப்பை என ஒதுக்கி வைத்திருந்த பண்டைய கிரீடம் ஒன்றிற்கு 67 இலட்சம் ரூபாய் மதிப்பு இருப்பதை அறிந்த உரிமையாளர் வியப்பில் உறைந்துள்ளார்.

பிரித்தானியாவின் சோமர்செட் பகுதியில் குடியிருந்து வரும் முதியவர் ஒருவரை அரிய வகை பொருட்களை ஏலத்தில் விடும் நிறுவனத்தில் இருந்து சிலர் வந்து சந்தித்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கை அறிந்த அந்த முதியவர் தமது குடும்பத்தில் பரம்பரையாக பாதுகாத்து வைத்திருக்கும் பொருட்களை அவர்களுக்கு காட்டியுள்ளார். இதனிடையே பல ஆண்டுகளாக ஒதுக்கியே வைத்திருக்கும் ஒரு அட்டை பெட்டியை அந்த முதியவர் எடுத்து அதில் இருப்பவையை வெளியே கொட்டியுள்ளார்.

அப்போது அந்த அட்டை பெட்டியில் தங்கத்தாலான கிரீடம் ஒன்றும் இருந்துள்ளது. அந்த முதியவருக்கு அந்த கிரீடம் குறித்து மேலதிக தகவல் எதுவும் தெரியாததால் அதை அப்படியே குபபை என ஒதுக்கி வைத்திருந்துள்ளார்.

கிரீடத்தை பார்த்த ஏலம் விடும் நபர்களுக்கு, அந்த கிரீடத்தின் தனித்தன்மையும் வடிவமும் வித்தியாசத்தை உணர்த்தியுள்ளது.

உடனடியாக அவர்கள் அந்த கிரீடத்தின் மதிப்பு குறித்து சம்பந்தப்பட்ட நிபுணர்களிடம் விசாரித்துள்ளனர். அந்த நிபுணர்கள் தெரிவித்த தகவல்கள் கிரீடத்தின் உரிமையாளரை வியப்பில் உறைய வைத்துள்ளது.

அந்த கிரீடம் சுமார் 2,300 ஆண்டுகள்பழைமையானது எனவும் சுத்தமான தங்கத்தால் பொற்கொல்லர்களால் கைகளால் உருவாக்கப்பட்ட கிரேக்க கிரீடம் இதுவெனவும், பண்டைய காலகட்டத்தில் வெற்றிவாகை சூடும் கலை மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு பரிசாக வழங்கப்படும் பொக்கிஷம் இது எனவும், இந்த கிரீடத்தின் தற்போதைய மதிப்பு குறைந்தது 67 இலட்சம் ரூபாய் எனவும் அந்த முதியவரிடம் தெரிவித்துள்ளனர்.

முதியவருக்கு இந்த கிரீடம் எப்போது அவர்களது குடும்பத்தினரால் வாங்கப்பட்டது என தெரியவில்லை. ஆனால் 1940களில் இவரது குடும்பத்தினர் எவரேனும் இதை வாங்கியிருக்கலாம் என கூறப்படுகிறது.

கடந்த 2012 ஆம் ஆணடு இதேபோன்ற கிரீடம் ஒன்று ஏலத்தில் விடப்பட்டதில் அதன் உரிமையாளருக்கு 1.96 கோடி ரூபாய் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நாக்கைத்துண்டித்து தண்டனை; பொது இடத்தில் நிறைவேற்றம்!

ஈராக்கிய பலுஜ்ஜாஹ் நகரில் இடம்பெற்ற மோதல்களின் போது ஐ.எஸ். தீவிரவாத குழுவிலிருந்து தப்பியோட முயற்சித்த தீவிரவாத குழுவைச் சேர்ந்த 5 உறுப்பினர்களுக்கு தீவிரவாதிகளால் பொது இடத்தில் வைத்து நாக்கு துண்டிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பலுஜ்ஜாஹ் நகர் கடந்த இரு வருடங்களாக ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அந்த நகரை மீளக் கைப்பற்றும் முகமாக அந்நகருக்கு அருகில் ஷியா இன படையினரால் முக்கிய தாக்குதல் நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், ஐ.எஸ். தீவிரவாத குழுவின் உறுப்பினர்களான குறிப்பிட்ட 5 பேரும் தீவிரவாத குழுவிலிருந்து வெளியேறி அந்த நகரை விட்டு தப்பியோட முயற்சித்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அவர்கள் ஐவரையும் கைது செய்த தீவிரவாதிகள் அவர்களை தமது மத நீதிமன்றத்தில் நிறுத்திய போது அவர்களது நாக்கைத் துண்டிக்க தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்படி பலுஜ்ஜாஹ் நகரை விட்டு வெளியேற முடியாது பலலாயிரக்கணக்கான பொது மக்கள் அங்கு தொடர்ந்து சிக்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-10)



# சிறுவர் அரங்கம்

1446

# தேவதை

மாலைப்பொழுது வானத்துக்கு மஞ்சள் கலந்த இளஞ்சிவப்பு நிறத்தைக் கொடுத்து திரும்ப வாங்கிய வண்ணம் கதிரவன் மேற்குத் தொடர்ச்சி மலைக்குள் புகுந்து கொண்டிருக்கிறது.

ஆறாம் வகுப்புப் படிக்கும் கணேஷ் பள்ளியில் இருந்து வந்தவுடன் புத்தகப் பையை இறக்கிவிட்டு அடுப்படியில் கண்ணாடி டப்பாவில் போட்டு வைத்திருந்த பொரிகடலையை இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு தெருவின் முற்றத்தில் விளையாடப் போய்விட்டான்.

இருள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது.

“ஏய்...கணேஷ்! விளையாடியது போதும், வந்து படிடா” என்று அம்மா கூவ, ஓடி வந்தான்.

“போய் கை, கால் அலம்பிட்டு மாடி மேலே போயி படி”

கணேஷ் நெடுநேரம் மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்தான்.

“கணேஷ் நேரமாயிடுச்சு. சாப்பிட்டு தாத்தா கூடப் போய்ப்படு. காலையில் படிக்கலாம்” என்றாள் அம்மா.

சாப்பிட்டுவிட்டு தாத்தாவுடன் படுத்தான். தூக்கம் வரவில்லை. “தாத்தா ஒரு கதை சொல்லுங்க தாத்தா” என்றான்.

பேரக்குழந்தை கேட்கிறதே என்று தாத்தாவும் கதை கூற ஆரம்பித்தார்:

ஒரு ஊர்ல ஒரு ராஜா. அவரு ஆட்சியில மாதம் மும்மாரி பொழிந்தது. அந்த ராஜா வுக்கு மீனான்னு ஒரு ராஜகுமாரி. தேவதை போல கொள்ளை அழகு. குரு குலத்துல நல்லா பாடம் படிச்சும் வீர, தீர வித்தைகளை கத்து கிட்டும் இருந்தது. அழகும் அறிவும் இணைந்த பொக்கிஷம் என்று நாட்டு மக்கள் இளவரசியைப் புகழ்ந்தார்கள்.



மீனாவுக்காகவே வனம் போன்ற அழகுடன் அரண்மனைக்குப் பக்கத்தில் நந்த வனம் அமைத்துக் கொடுத்தார் ராஜா. மாதம் ஒரு தடவை அரண்மனையை விட்டு வெளியே வரும் மீனா, நந்தவனம் வந்து உலாவிவிட்டுப் போவாள்.

அந்த ஊர் மக்கள் எல்லாம் மகிழ்ச்சியா இருக்கிற நேரத்துல அந்த ஊருக்குள்ள ஒரு வேதாளம் புகுந்தது. அந்த வேதாளம் ராத்திரி நேரம் ஊருக்குள் வந்து கல்யாணம் ஆகாத பொண்ணுங்க யாரு வந்தாலும் அடிச்சி ரத்தம் குடிச்சு கொன்னு போட்டுடும். கல்யாணம் ஆகாத பெண்களை விட்டுட்டு வேற யாரையும் தொடுறதும் இல்லை. கண்ணுக்குத் தட்டுப்படறதும் இல்லை.

இந்த விடயம் ராஜாவுக்குத் தெரிஞ்சி, வேதாளத்தைக் கொல்ல ஆட்களை அனுப்பினார். ஆனாலும் அதைக் கொல்ல முடியவில்லை. ராஜா குழம்பிப் போய் சோர்வாக இருந்தார்.

ராஜாவின் மனக்கவலையை மீனா அறிந்தாள்.

ஒரு நாள் ராஜகுமாரி ரொம்ப தைரியமாக ராத்திரி நேரம் அரண்மனைப் பின்பக்க வாசல் வழியா வேதாளத்தைப் பார்க்க கிளம்பினாள். கொஞ்சதூரம் போயி ஊரைக் கடந்ததும் வெள்ளிக் கொலுசை மாட்டி “ஜலக் ஜலக்” -னு சத்தம் வர்ற மாதிரி நடக்க ஆரம்பிச்சா.

உடனே பக்கத்துல இருக்குற ஒரு மரத்துல இருந்த அந்த வேதாளம் பாய்ந்து வந்து நின்றது. ராஜகுமாரி மீனாவுக்கு அதைப் பார்த்ததும் பயமாகி விட்டது. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வேதாளத்தைப் பார்க்காத மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

அந்த நேரம் ராஜகுமாரியின் கண்ணைப் பார்த்த வேதாளம் மின்னல் தாக்கின மாதிரி தடுமாறியது. அதே வேளையில் ராஜகுமாரி சுதாரித்தபடி, தனது இடுப்பில் இருந்த கத்தியைத் தூக்கி வேதாளத்தின் நெஞ்சில் எறிந்தாள். வேதாளத்தின் நெஞ்சு பிளந்து ரத்தம் பீறிட்டது.

வேதாளம் சாகப்போற நேரத்துல ராஜகுமாரியை கூப்பிட்டுச் சொன்னது, “தேவி யாரே! நான் வேதாளம் இல்லை. பக்கத்து நாட்டு அரக்க வம்சத்தவன். உங்கள் ஊரில் செல்வச் செழிப்போடு மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதை சீர்குலைக்க எங்கள் ராஜாவால் வேதாளம் வேஷம் போட்டு அனுப்பப்பட்ட வன் நான்” என்று சொன்னான். இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் உயிர் பிரிந்தது.

நாடே ராஜகுமாரியைப் புகழ்ந்தது. வீரத்திருமகள்னு அவளை முடிசூட்டி இளவரசி ஆக்கினார்கள்.

“என்னடா பேரப்புள்ள அந்த ராஜகுமாரி மாதிரி நீயும் நல்லா படிச்சி வீரமா, நல்ல தைரியத்தோடு, எதுக்கும் பயப்படாம இருக்கணும் என்ன!” என்று தாத்தா கேட்க, “கொர்...கொர்” என்ற குறட்டையுடன் கணேஷ் தூங்கிக் கொண்டிருந்தான்.

விடியற்காலை ஐந்து மணிக்கு படிப்பதற்காக கணேஷை எழுப்பி விட்டார். கணேஷ்ும் எழுந்து முகம் கழுவிவிட்டு வந்து புத்தகத்தை எடுத்தவாறு தாத்தாவிடம் கேட்டான்:

“என்ன தாத்தா! ராத்திரி நீங்க ஏதோ ராஜா, ராஜகுமாரி, வேதாளம்னு சொன்னீங்க. ஆனா எனக்கு முழுக்கதையும் ஏன் சொல்லலை?” என்று கேட்டான்.

தாத்தா கலகலவென்று சிரித்து விட்டார்.

## 05.2016 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1503 - ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்குமிடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது. இது 10 ஆண்டுகளில் முறிந்தது.
- 1588 - 30,000 பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா எனப்படும் 130 ஸ்பானியக் கப்பல்கள் பிரித்தானியக் கடற்படையினருடன் மோதும் பொருட்டு ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனிலிருந்து ஆரம்பித்தன.
- 1737 - வீனஸ் கோள் மேர்க்குரி கோளின் முன்னால் கடந்ததை ஜோன் பேவிஸ் என்ற வானியலாளர் அவதானித்தார்.
- 1905 - ரஷ்ய-ஜப்பானியப் போர்: சூஷிமா என்ற இடத்தில இடம்பெற்ற சமரில் ரஷ்யக் கடற்படையின் பால்ட்டிக் பிரிவு ஜப்பானியர்களால் அழிக்கப்பட்டது.
- 1815 - சிங்கள-முஸ்லிம் கலவரம், 1915: இலங்கையின் கண்டியில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் ஆரம்பித்து ஜூன் 5 இல் முடிவுக்கு வந்தது.
- 1937 - கலிபோர்னியாவில் கோல்டன் கேட் பாலத்தை பிராங்கிளின் ரூஸ்வெல்ட் அதிகாரபூர்வமாக திறந்து வைத்தார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பெல்ஜியம் ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- 1958 - இலங்கை இனக் கலவரம், 1958: இலங்கையின் ஆளுநர் சேர் ஒலிவர் குணதிலக அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.
- 1964 - பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1974 - வட அயர்லாந்தில் அதிகாரப் பரவலாக்கம் குறித்த சன்னிங்டேல் உடன்பாடு முறிந்தது.
- 1991 - எதியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவை எதியோப்பிய மக்கள் புரட்சி ஜனநாயக முன்னணியினர் கைப்பற்றினர். எதியோப்பிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1998 - பாகிஸ்தான் ஐந்து அணுவாயுதச் சோதனைகளை நிகழ்த்தியது. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சில நாடுகள் பாகிஸ்தானுக்கெதிராக பொருளாதாரத் தடைகளை அறிவித்தன.

### பிறப்புகள்

- 1865 - மைசூர் வாசுதேவாச்சாரியார், கர்நாடக இசைப் பாடகர். (இ. 1961)
- 1923 - என். டி. ராமராவ், இந்திய நடிகர், அரசியல்வாதி. (இ. 1998)
- 1923 - டி.எம். தியாகராஜன், கர்நாடக இசைக் கலைஞர். (இ: 2007)
- 1980 - ம. சிவசுப்பிரமணியன், தமிழ் எழுத்தாளர்.

### இறப்புகள்

- 1884 - சாமுவேல் ஃபிஸ்க் கிறீன், தமிழ் மருத்துவ முன்னோடி, அமெரிக்கக் கிறிஸ்தவ ஊழியர். (பி. 1822)
- 1972 - எட்டாம் எட்வேர்ட், ஐக்கிய இராச்சியத்தின் முடி துறந்த மன்னர். (பி. 1894)
- 1998 - இராஜ அரியரத்தினம், ஈழத்துப் பத்திரிகையாளர்,எழுத்தாளர். (பி. 1916)

# சம்பூர் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடக்கூடாது

## இரு தரப்பினரிடமும் பிரதமர் வலியுறுத்து

(கொழும்பு)

**சம்பூரில் நடந்த சர்ச்சைக்குரிய சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவெடுக்கும் வரை அதுபற்றி எந்தக் கருத்துக்களையும் வெளியிடக் கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இரண்டு தரப்பினரையும் வலியுறுத்தியுள்ளார்.**

சம்பூர் மகாவித்தியாலயத்தில் கடந்தவாரம் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில், கடற்படை அதிகாரியை, கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் கடுமையாகத் திட்டிய விவகாரம் தொடர்பாக, பிரதமர், கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளார்.



அதேவேளை, இலங்கை கடற்படை ஏற்கனவே இது பற்றிய அறிக்கை ஒன்றை பிரதமரிடம் கையளித்துள்ளது.

தற்போது ஜி-7 மாநாட்டுக்காக ஜப்பான் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும், கடற்படையினதும், கிழக்கு மாகாண முதலமைச்சரினதும் அறிக்கைகளை, பிரதமர் கையளிக்கவுள்ளார்.

இந்த நிலையிலேயே, சர்ச்சைக்குரிய இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி பொருத்தமான முடிவு ஒன்றை எடுக்கும் வரை, இது தொடர்பாக கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்குமாறு, கடற்படையையும், கிழக்கு முதல்வரையும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விடயத்தில் இறுதி முடிவு ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னரே எடுக்கப்படும் என்றும் அவர் இரண்டு தரப்பினரிடமும் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜய குணவர்த்தனவிடம், இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசாரணை நடத்தியுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

# அனர்த்தம் காரணமாக அழிவடைந்த ஆவணங்களை அரசாங்கம் இலவசமாக வழங்குவதற்குத் திட்டம்

அனர்த்தம் காரணமாக அழிவடைந்த ஆவணங்களை அரசாங்கம் இலவசமாக வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக தொலைந்துபோன ஆவணங்களை இலவசமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காணாமற் போனவர்கள், உயிரிழந்தவர்கள் மற்றும் மக்களின் ஆவணங்கள் அழிவடைந்துள்ளமை குறித்தும் அமைச்சு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். சீரற்ற காலநிலை காரணமாக 2800 கிராம சேவை பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொலைந்து போன மற்றும் அழிவடைந்த ஆவணங்கள் கிராம சேவகர்களின் ஊடாக மீளவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-10)

# ஜி-7 மாநாடு நன்மையைப் பெற்றுக் கொடுக்கும் ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் நம்பிக்கை

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு ஜி-7 மாநாட்டுடன் இணைந்து நடைபெறும் மாநாடு முக்கியத்துவம் வாய்ந்தது என ஜப்பானிற்கான இலங்கைத் தூதுவர் தம்மிக்க கங்கனாத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் ஜி-7 மாநாடு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. இந்த மாநாட்டிற்கு இணையாக நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜப்பானிற்கு சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே இலங்கையில் முன்னெடுக்க திட்டமிட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் குறித்து உலகின் பொருளாதாரம் மிக்க நாடுகளுக்கு தெளிவுபடுத்த சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்து சமுத்திரத்தை பொருளாதார கேந்திரமாக பல நாடுகள் அங்கீகரித்துள்ள நிலையில் இந்து சமுத்திரத்தில் சுதந்திரமும் அமைதியும் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

புராதன கடற்பாதையில் இலங்கை முக்கிய இடத்தை பிடித்துள்ளமையினால் எதிர்கால செயற்பாடுகளில் இலங்கை முக்கிய இடத்தை பெறுவதற்கும், பிராந்தியத்தில் கேந்திரஸ்தானமாக பரிணமிப்பதற்கும் வாய்ப்புக்கள் உள்ளதாக ஜப்பானிற்கான இலங்கை தூதுவர் தம்மிக்க கங்கனாத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-10)

# மாணவனை தாக்கிய ஆசிரியர்கள் தொடர்பில் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(கொழும்பு)

காலியில் பிரபல பாடசாலையில் தரம் 12இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் மூன்று ஆசிரியர்களால் தாக்கப்பட்டமை தொடர்பில் காலி பொலிஸில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் பிரதி அதிபர்கள் இருவரும், ஒழுக்காற்று ஆசிரியருமே குறித்த மாணவனை தாக்கியுள்ளதாக காலி பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் காயமடைந்த மாணவன் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஆசிரியர்களின் தலையீட்டை தொடர்ந்து இரண்டு நாட்களின் பின் வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஒழுக்காற்று ஆசிரியர் வைத்தியசாலையில் வைத்து தாக்கப்பட்ட மாணவனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகவும் பாதிக்கப்பட்ட மாணவன் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்துள்ளான்.

எனினும் நேற்றுமுன்தினம் மீண்டும் குறித்த மாணவன் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாணவனின் பெற்றோர் தெரிவித்துள்ளனர். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### நாள்தோறும் நாம் பெறும் பாடங்கள்

தினம் தினம் பல சம்பவங்களின் மூலம் இதைச் செய்தால் வம்பு வழக்கு, அதைச் செய்தால் நட்டம், இதைச் செய்தால் அவமானம், அதைச் செய்தால் தோல்வி, இதைச் செய்வது முட்டாள்த்தனம், அதைச் செய்வது கேவலம் என்றெல்லாம் தெரிந்து கொள்கிற நாம் தொடர்ந்து அத்தகைய செயல்களை விடாமலும் தவறாமலும் செய்து வருகிறோம்.

இது செய்தால் இப்படி என்று தெரிந்த பிறகும் தொடர்ந்து அதே தவறுகளைச் செய்வதன் பொருள்தான் அல்லது நோக்கம் தான் என்ன? இதை நம்மில் பலரும் உணர்ந்து பார்ப்பதாகத் தோன்றவில்லை.

நீங்கள் அப்படி செய்யாதீர்கள். அப்படிச் செய்தால் இப்படியாகும். என்று எவரேனும் நமக்கு உபதேசம் செய்யவில்லை. மாறாக நாமே அதை அனுபவித்து உணர்ந்திருக்கிறோம். அப்படியிருக்கையில், நீ என்ன சொல்வது. நான் என்ன கேட்பது என்றோ, எனக்குத் தெரியாத ஒன்றை நீ பெரிதாக உபதேசம் செய்ய வந்து விட்டாயாக்கும்? என்றோ நாம் மற்றவர்களின் உபதேசங்களைப் புறக்கணித்து விடுவதைப் போல் நம் அனுபவங்களின் மூலம் நாமே பெற்ற நீதியை அல்லது உண்மையைப் புறக்கணிப்பது இல்லை.

அத்தகைய உண்மைகளை மீண்டும் மீண்டும் அனுபவித்துத் தெரிந்து கொள்வதற்கு நாம் சந்தர்ப்பமே அளிக்கக்கூடாது.

ஆங்கிலத்தில் இப்படி நாம் தினம் தினம் அறியும் நீதியை தி மாரல் ஆப்தி டே என்று சொல்வார்கள். இப்படி நாம் அறிய நேரும் ஒவ்வொன்றையும் மன ஏட்டில் பொன்னெழுத்துக்களால் பொறித்துக் கொள்ள வேண்டும். நினைவாற்றலில் குறைந்தவர்கள் தனித்தாளிலோ அல்லது டையரியிலோ இவற்றைக் குறித்துக் கொண்டு அவ்வப்போது புரட்டிப் பார்க்கலாம்.

அன்றைக்குப் பெற்ற பாடம் அன்றே காற்றில் பறந்து விடாதபடி இருக்க இது அவசியம். காரணம் முதல் முறை சாதாரணமாகப் பெற்ற அந்தப் பாடம் மறுமுறை மிகக் கடுமையான ஒன்றாக, நம்மால் தாங்கிக் கொள்ள முடியாததாக அமைந்துவிடலாம்.

அதற்கு நாம் வாய்ப்பளிக்கத்தான் வேண்டுமா?

தாங்கள் பெற்ற பாடத்தின் மூலம் தினம் தினம் தங்களிடமுள்ள குறைகளைக் கழற்றித் தூக்கி எறியாதவர்கள்-

அல்லது தங்களை மாற்றிக் கொள்ளாதவர்கள்-

வீணான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பதோடு-

தினம் தினம் நட்டத்தையும் அவப் பெயரையும் அடைவதோடு -

எந்தக் காலத்திலும் முன்னேற்றம் என்பதை கனவிலும் அடைய முடியாது!

லேனா தமிழ்வாணன்

# இலங்கையின் அடுத்த ராணுவத் தளபதி பதவி

## உருளப்போகும் முக்கிய தலைகள்

தற்போது பதவி நீடிப்பில் உள்ள இலங்கை இராணுவத் தளபதியான லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும், ஓகஸ்ட் 21 ஆம் திகதி முடிவடையவுள்ள நிலையில், இவரது பதவிக்காலம் மேலும் நீடிக்கப்படுமா என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

தற்போதைய இராணுவத் தளபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படாவிட்டால், அடுத்த இராணுவத் தளபதியாக தற்போது சேவையிலுள்ள, ஆறு மூத்த மேஜர ஜெனரல்களில் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டியிருக்கும்.

இந்தப் பதவிக்குத் தகுதி வாய்ந்த சில மேஜர் ஜெனரல்கள் இராணுவத்திற்குள் இருக்கின்ற போதிலும், தற்போதைய இராணுவத் தளபதியின் பதவிக்காலத்தை மேலும் நீடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், தற்போது பதவியிலுள்ள ஆறு மூத்த மேஜர் ஜெனரல்களும் இவ்வாண்டு ஓய்வு பெறவுள்ள நிலையிலேயே இப்பதவி நீடிப்பு இடம் பெறவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

அத்துடன் இந்த ஆறு இராணுவ அதிகாரிகளும் ஓய்வுபெற்ற பின்னர், இரண்டாம் அணியிலுள்ள மூத்த இராணுவ அதிகாரிகளுள் ஒருவரையே இலங்கையின் அடுத்த இராணுவத் தளபதியாக நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இவர்களில் சிலர் முக்கிய அரசாங்க அமைச்சர்களின் சிபாரிசை ஏற்கனவே பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நாட்டின் இராணுவத் தளபதியாக வரத்தகுதி பெற்ற மேஜர் ஜெனரல்களில் முதல் நிலையில் உள்ள மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் வரும் ஓகஸ்ட் 11ஆம் திகதி 55 வயதை அடைவார். இவர் மிகவும் தகுதி பெற்ற இராணுவ அதிகாரி ஆவார்.

செப்டெம்பரில் 55 வயதை நிறைவு செய்யும் மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா அடுத்த நிலையில் உள்ளார். எனினும், இவர் மீதான காணி விவகாரக் குற்றச்சாட்டு மற்றும் ஐந்து ஆண்டுகள் வரை இராணுவத்தை விட்டு வெளியேறி இருந்தமை போன்ற சில காரணங்களால் நாட்டின் இராணுவத் தளபதியாக வருவதற்கான தகுதி இவருக்குக் குறைவாகவே காணப்படுகிறது. மகிந்த தேர்தலில் தோல்வியுற்ற போது, நாட்டை இராணுவ சதிக்குள் வீழ்த்துவதற்கான திட்டத்தை தீட்டியவர்களின் பட்டியலில் மேஜர் ஜெனரல் சுமேத பெரேராவின் பெயரும் இடம்பெற்றிருந்தது.

அடுத்த ஆண்டு ஓய்வு பெறவுள்ள மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக அடுத்த நிலையில் காணப்படுகிறார். இவர் போர்க்காலத்தில் முக்கிய பங்காற்றாவிடினும் கூட, முக்கிய சில அரசியல்வாதிகளால் விரும்பப்படும் ஒருவராக இவர் காணப்படுகிறார். தற்போதைய இராணுவத் தளபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படுவதுடன், ஏனைய மூத்த இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற்றால், அடுத்த இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவதற்கான தகுதியை மேஜர் ஜெனரல் சன்ன குணதிலகவே கொண்டுள்ளார்.



வன்னிக்கான தற்போதைய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவும் இப்பதவிக்குத் தகுதியான ஒருவராவார். ஆனால் தற்போதைய அரசாங்கமானது மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவை கொழும்பிற்கு இடம் மாற்றத் தீர்மானித்த போது, தான் தொடர்ந்தும் வன்னியின் கட்டளைத் தளபதியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் மற்றும் கோரிக்கையை முன்வைக்குமாறு சில புதத பிக்குகளை பெரேரா தூண்டியதாக 'த சண்டே லீடர்' செய்தித்தாளில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவும் வரும் நவம்பர் மாதம் ஓய்வு பெறவேண்டியவர ஆவார்.

அடுத்ததாக மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த. இவரும் நவம்பர் மாதம் ஓய்வுபெற வேணடியவர். யுத்தத்தில் வெற்றிகரமாகச் செயற்பட்டவர். முல்லைத்தீவில இடம்பெற்ற இறுதி யுத்தம் வரை இராணுவத்தை வழிநடத்தியிருந்தார். எனினும், புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இவர் புலிகள் அமைப்பின் மிகவும் தீவிரத் தாக்குதல்களுக்கு ஆளாகியிருந்தார். இதனால் இராணுவத்தரப்பிற்கு அதிகூடிய இழப்பு ஏற்பட்டது. இதன் பின்னர் இவர் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டு, அநுராதபுர ஒருங்கிணைப்பு அதிகாரியாகச் செயற்பட்டார். அதையடுத்து இவரிடம் இருந்த பொறுப்புகள், மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு வழங்கப்பட்டது. இதன் பின்னர் இந்தப் பொறுப்பு மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவிற்கு வழங்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் உபுல விதானகேயும் இந்தப் பதவிக்குப் பொருத்தமாக உள்ளபோதிலும், ஏனையவர்களுடன் ஒப்பிடும் போது இவரது தகுதி குறைவாகவே காணப்படுகிறது. இவர் அடுத்த ஆண்டு ஓய்வு பெறவுள்ளார். இவருக்கு அடுத்த நிலையில் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன உள்ளார். பிரபாகரன், சூசை, பானு, இரட்ணம் மாஸ்ரர் உட்பட புலிகளின் முக்கிய உறுப்பினர்களின் மரணத்திற்குப் பொறுப்பானவர் என ஊடகங்களில் பிரபலம் பெற்றுள்ளார். இவர் இந்த ஆண்டு செப்டெம்பரில் ஓய்வுபெறவுள்ளார். இவர் இலங்கையின் இராணுவத் தளபதி பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இதேபோன்று, மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவும் இப்பதவிக்குப் பொருத்தமானவர் ஆவார. இவர் அடுத்த ஆண்டு ஓய்வுபெறவுள்ளார். இதன பின்னர் மேஜர் ஜெனரல் லசந்த விக்கிரமசூரிய. இவரும் அடுத்த ஆண்டு ஓய்வுபெறவுள்ளார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்து வரும் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க இப்பதவிக்கு மிகவும் பொருத்தமானவர ஆவார். சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்கியதால் இவர் முன்னைய அரசாங்கத்தால் குறிவைக்கப்பட்டிருந்தார். பொன்சேகாவால் ஆதரவளிக்கக்கூடிய மேஜர ஜெனரல் சேனநாயக்க அடுத்த இராணுவத் தளபதியாக வருவதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டாலும், இவர் இப்பதவிக்கு வந்தால் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவத்தை தனது முழுக் கட்டுப்பாட்டிற்குள்கொண்டு வந்துவிடுவார் எனவும் கூறப்படுகிறது. இதனால் அரசாங்கத்திற்கு இடையூறுகள் ஏற்படலாம். எனினும் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க இதற்குப் பொருத்தமான ஒரு வேட்பாளராக உள்ளார். இவரும் அடுத்த ஆண்டு ஓய்வு பெறவுள்ளார்.

இதேபோன்று, அடுத்த ஆண்டு ஓய்வுபெறவுள்ள மேஜர் ஜெனரல் ஜனக வெல்கமவும் இப்பதவிக்குப் பொருத்தமானவர் ஆவார். அடுத்த ஆண்டு ஓய்வுபெறவுள்ள மேஜர் ஜெனரல் உதய பெரேராவும் இதற்குப் பொருத்தமான ஒரு வேட்பாளராவார். இவர் மிகவும் கடும் உழைப்பாளியாகவும் விழிப்புணர்வு மிக்க அதிகாரியாகவும் காணப்படுகிறார். இவர் தனது கட்டளையின் கீழ் செயற்படும் இராணுவ வீரர்களிடமிருந்து ஆகக்கூடிய வெளிப்பாட்டை எதிர்பார்க்கும் ஒருவராவார். இவரது இறுக்கமான நடவடிக்கையால சிலர் அச்சம் கொண்டாலும் கூட, இராணுவம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இவர் விளங்குவதாக ஏனையோர் கூறுகின்றனர்.

இவ்வாறு பல மேஜர ஜெனரல்கள் உள்ள போதிலும் இவர்களில் யார் அடுத்த இராணுவத தளபதியாகத் தெரிவு செய்யப்படுவார்கள் என்பது கேள்விக்குறியே.

இராணுவத்தில், இலங்கை இராணுவத்தின் பொதுவான சட்டத்தின் அடிப்படையில் ஒருவர் எப்போது இராணுவத்தில் சேர்கிறாரோ அதை அடிப்படையாகக் கொண்டே அவரது பதவிக்காலம் கணிக்கப்படுகிறது. எனினும், ஒரு அதிகாரி மற்றையவரை விட உயர் பதவியை வகிக்க முடியும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# வடக்கு சபையில் ஊடகங்கள் மீது பாய்ச்சல்

## சமூக வலைத்தளங்கள் என்ன பேசுகின்றன?


விலை 120.00
வலம்புரி
Valampurii
அதிகார வரம்பை மீறி ஆளுநர் செயற்படுகிறார்!
அவர் தலைமையிலான கூட்டங்களை வடக்கு உறுப்பினர்கள் புறக்கணிக்க முடிவு

Like Reply 4

பட்டினியால் சாகப் போகிறவர்கள் பற்றி கதைக்க இவர்களுக்கு நேரமில்லையா? பட்டினி கிடந்து பசியால் மெலிந்து செத்திட நேர்ந்தாலும் என்னதான் நடக்கிறது மாகாணசபையில்?

என்ன மாதிரியான தேசத்தில் வாழ்கிறோம்?

நானும் அப்படித்தான் நினைக்கிறேன்! அவருக்கு மஞ்சள் காமாலை போலத்தான் தெரிஞ்சபடியால் வலம்புரியை மஞ்சள் பேப்பர் என்று சொன்னாரோ?
Like Reply ஓமோம்

மாகாணசபை நினைப்பதை மட்டும்தான் பத்திரிகைகள் போட வேண்டும் என்றால் அது அவர்களுடைய முட்டாள்தனம்.
Like Reply 3

சபையில எப்போது இவர்கள் மக்கள் பிரச்சினையை கதைத்திருக்கிறார்கள். கதைத்தது எல்லாம் கொடுப்பனவு அதிகரிப்பு தேவை; பாராளுமன்ற உறுப்பினர் போன்று எமக்கும் வசதி வாய்ப்பு வேணும். பொலிஸ் பாதுகாப்பு வேணும் இவை தான் இவர்கள் சபையில் பேசுவது. இல்லையெனில் சம்பந்தமே இல்லாமல் கத்திட்டு இருப்பது இவற்றை தவிர வேறு எதனை ஒழுங்காக செய்கிறார்கள்?

வட மாகாண சபைக்கு ஓர் யோசனை; இனிவரும் வடமாகாண சபை அமர்வுகளின் போது ஊடகவியலாளர்களை அனுமதிக்காதீர்கள். சபை அமர்வு முடிவடைந்த பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி அன்றைய அமர்வில் எவர் எவர் என்ன என்ன பிரேரணை முன்மொழிந்தார்கள் எனவும் எவர் எவர் என்ன என்ன விடயாங்கள் தொடர்பில் பிரஸ்தாபித்தார்கள் எனவும் கூறினால் உங்களை பாதிக்கும் செய்திகள், தேவையற்ற செய்திகள் எவையும் ஊடகங்களில் வெளிவராது. அத்துடன் சபா மண்டபத்தில் உங்கள் இருக்கையில் இருந்து குறட்டை விட்டு தூங்கினாலும் செய்திகள் எவையும் வெளியில் வராது. மிக முக்கிய ஊடகவியலாளர்களுக்கும் அன்றைய நாள் விரயம் ஆகாது. (மாலை வேளை எனக்கு நித்தா வந்து கண்ணயர்ந்த வேளை தோன்றிய யோசனை)
Like Reply 1

இவர்தான் வீரசிங்கம் மண்டபத்தில வடமாகாண வேட்பாளர் அறிமுக கூட்டத்தில வீர வணக்கம் செலுத்தி உரை தொடங்கினவர் நானும் ஏதோ என்று நினைச்சன்... அரசியல்ல நல்லா வருவா ராசா
Like Reply 1


மஞ்சள் பத்திரிகை எண்டு சொன்னதை சபையின் பதிவில் இருந்து சிவஞானத்தார் நீக்கிட்டாராம். நீக்கினா என்ன நீக்காட்டி என்ன? சொன்னது சொன்னது தானே. கையோட கண்பரிசோதனைக்கு ஒரு தீர்மானத்தை கொண்டு வாங்கப்பா ☐சபையில கலர் லைட் சிஸ்டம் ஏதும் இருக்கா?
Like Reply 1

இதெல்லாம் ஒரு.... பேசாம இவங்களை பெருமாள் கோவில்ல... எடுக்க சொல்லுங்கள்
Like Reply

வடமாகாண சபையினர் ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டு போட முயற்சி, எடுக்கினமாம். அப்ப மகிந்த பரவாயில்லை போல தெரியுது.

அடுத்த முறை எலக்ஷன் நடக்கேக்கையும் யாழ்ப்பாணத்து மஞ்சள் பத்திரிகைகளில் தங்கட விளம்பரமோ செய்தியோ இவையள் போட மாட்டினம் தானே. இல்லாட்டி சனம் உவையளை ........... எண்டெல்லோ நினைக்குங்கள்.
Like Reply 2

வடக்கு மாகாண உறுப்பினர்கள்...



Like Reply 6

உண்மையில் மாகாண சபையின் வேலை தான் என்ன என்று தெரிந்தவர்கள் சொல்ல முடியுமா நண்பர்களே
Like Reply 6

மஞ்சள் காமாலை நோய் வந்தால் பார்க்கிறது எல்லாமே மஞ்சளா தெரியுமாமே..... உண்மையா?

இப்ப உவையல் கத்துறது அவையின்ட செய்தி போடுறதில்லை எண்டுதான்.
Like Reply 4

நேற்று பேப்பரை தூக்கி பிடிச்சு சிறப்புரிமை மீறல் என கத்தி மூன்று மணித்தியாலங்களை வேஸ்ட் ஆக்கிட்டாங்க. அடுத்த அமர்வில் பேஸ்புக்ல எங்கள் சிறப்புரிமை மீறப்பட்டு உள்ளது என பேஸ்புக் பற்றி கத்தி முழு நாளையும் வேஸ்ட் பண்ணினாலும் பண்ணுவாங்க. அதற்கும் மேலே போய் பேஸ்புக்க தடை செய்ய வேண்டும் என மாகாண சபையில் பிரேரணை கொண்டு வந்து விவாதம் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

மக்களிடம் வாக்கு கேட்டு மக்களுக்கு சேவை செய்வது என்று சபையில உறுப்பினராயிட்டு அப்புறம் வாகனம் வேண்டும் பாதுகாப்புக்கு பொலிஸ் வேணும் எல்லா வசதியும் சரி இதெல்லாம் எடுத்து ஒழுங்கா மக்களுக்கு சேவை செய்தாலும் பரவாயில்லை. அது எதுவும் செய்யுறதில்லையே இதுக்குள்ள வெட்டி கதை.
Like Reply 3

ஓம் இவர்களுக்கு நேரமில்லை தானே? ஏன்? இவையளுக்கு சொகுசு வாகனங்கள், வீடுகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிற போது மாகாண சபை இவர்களுக்கு இப்ப சும்மா ஜாலியான ஒரு றிசோட்! அடுத்த முறையும் இவர்களையே அனுப்பி வையுங்களேன் நல்லா....... வருவார்கள்
Like Reply 1

உங்களை பற்றி அவதூறு ஏற்படுத்தும் விதமாக தவறான செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டால் அதற்கு மறுப்பு தெரிவிக்க கோரியோ அல்லது தேவைப்படின் சட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். அதனை விடுத்து செய்திக்காக ஒரு சபை அமர்வை முடக்கும் அளவுக்கு விவாதம் நடத்துவது ஏற்புடையதல்ல. அதிலும் ஊடகத்தினை தடை செய்ய மாகாணசபையை கோருவது உச்சக் கட்ட நகைப்புக்குரிய விடயமாகும்.

சுட்டிக் காட்டும் எழுத்துக்கள் வரையும் போது தான் தவறுகள் திருத்தப்பெற்று சிறப்பாய் அமையும் அரசியல் ஆட்சி!
Like Reply 2

அண்ணே இவர்கள் விளம்பரமே இல்லாம தேர்தல்ல போட்டி போட்டு வெல்லுவதற்கு அவ்வளவு பெரிய உத்தமர்களோ? விளம்பரம் போட்டாதான் இவர்கள் இன்னமும் இருக்கிறார்கள் என்றாவது மக்களுக்கு தெரியும். ஏதோ இவர்கள் ஆட்சிக்கு வந்து எல்லாவற்றையும் நேர்த்தியாக செய்தது போல


விலை 120.00
வலம்புரி
Valampurii
முதலமைச்சரின் அனுமதியின்றி கூட்டம்
விலகினார் ஆளுநர் நடத்தினார் சுமந்திரன்!
வடக்கு உறுப்பினர்கள் 31 பேர் புறக்கணிப்பு

உங்களுக்கு ஊடகங்கள் மீது காழ்ப்புணர்ச்சி இருக்குமாயின் உங்கள் வீட்டில், நண்பர்கள் மத்தியில் உறவினர்கள் மத்தியில், தேவைப்படின் ஊரின் மத்தியில் மேடை போட்டு இந்த ஊடகம் மஞ்சள், இந்த ஊடகம் சிவப்பு, இந்த ஊடகம் நீலம் என கத்துங்கள்.

அவர்கள் சொல்ல வருவது ................ போல காலத்திற்கு ஏற்ப யால்ரா போடுவது போல செய்தியை போடட்டாம்
Like Reply 5

அவங்களே ஒரு பத்திரிகை அடிச்சு விட்டாலும் பரவாயில்லை
Like Reply 6

Like

எப்படி திட்டினாலும் வருமானம் பேப்பர் காரனுக்குத்தான்

இதுக்கு வடக்கு மாகாண சபைனு ஒரு ஊடகத்தை உருவாக்கி அவங்களே பேசி அவங்களே செய்தியும் வெளியிடலாம்
Like Reply 1


மஞ்சளா அது வெள்ளைப்பேப்பர் கறுப்பு மைல அச்சடித்து இருக்கும் என்று தான் எனக்கு தெரியும். எதுக்கும் மாகாணசபை உறுப்பினர்களுக்கு கண் சிகிச்சை முகாம் நடத்துகிறது நல்லது.
Unlike Reply 6

வலம்புரி மஞ்சள் பத்திரிகை என வட மாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆனோல்ட் குற்றச்சாட்டு. அப்படியே மற்ற பத்திரிகைகளையும் எந்த வகை எண்டு சொன்னீங்க எண்டா உதவியா இருக்கும்.

அந்த 3 மணி நேரமும் அவர்களது விவாதத்தைச் செவிமடுத்துக் கொண்டிருக்கவேண்டிய தண்டனை உங்களுக்கும் கிடைத்திருக்கிறதே.
Like Reply 6

அவனுங்களை கொண்டேட அங்க இருத்தின பாவம் எங்களை சும்மா விடாது தானே
Like Reply 3

வலம்புரி மஞ்சள் பத்திரிகை என வடக்கு மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு



காமாலைக்காரனுக்கு பார்க்கிறது எல்லாம் மஞ்சளாம்!

வலம்புரி பேப்பர் கொஞ்சம் பழுப்பு கலர் தான் அதுக்காக மஞ்சள் என்று எல்லாம் சொல்ல ஏலாது.

பேசாம ஒன்று செய்யலாம் ஊடகவியலாளர்கள் அனுமதிக்காம விட்டுட்டு மாலை ஊடக சந்திப்பும் நடத்தாம தாங்கள் என்ன என்னவிடயம் செய்தியா வரவேணும் என நினைக்கீணமோ அதுகளை எழுதி இது தான் நடந்தது என்று ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.
Like Reply 8


விலை 120.00
வலம்புரி
Valampurii
வலம்புரி செய்தியால் அதிர்ந்தது மாகாண சபை
நேற்றைய அமர்வில் அனல் பறந்த விவாதம்

# தமிழ் சினிமா வரலாறு

169

## ஸ்ரீதர் டைரக்‌ஷனில் எம்.ஜி.ஆர். நடித்த உரிமைக்குரல்

...கண்ணதாசன் எழுதிய விழியே கதை எழுது என்ற பாடல் எம்.எஸ். விஸ்வநாதன் இசை அமைப்பில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அந்தப் பாடல் காட்சியை வெகு சிறப்பாகப் படமாக்கியிருந்தார் ஸ்ரீதர்.

வாலி எழுதிய கல்யாண வளை ஓசை, நேத்துப் பூத்தாளே 'ரோஜா மெட்டு, மாட்டிக்கிட்டாரடி மயிலைக் காளை ஆகிய பாடல்களும் ஹூட் ஆகின.

ஸ்ரீதர் பல வெற்றிப்படங்களைக் கொடுத்திருந்தாலும் வசூலில் சாதனை படைத்த படம் உரிமைக்குரல்.

மதுரையில் இப்படம் 200 நாட்கள் ஓடியது. நெல்லையில் வெள்ளிவிழா கொண்டாடியது. 12 தியேட்டர்களில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது.

சிரித்து வாழ வேண்டும் உதயன் புரொடக்‌ஷன்ஸ் சார்பில் மணியனும் வித்வான் வே.லட்சுமணனும் தயாரித்த படம். வசனத்தை ஆர்.கே.சண்முகம் எழுத, எம்.எஸ்.விஸ்வநதன் இசை அமைத்தார். எஸ்.எஸ். பாலன் டைரக்ட் செய்தார்.இதில் எம்.ஜி.ஆருடன் லதா இணைந்து நடித்தார்.

### இதயக்கனி

1975 இல் நினைத்ததை முடிப்பவன், நாளை நமதே, இதயக்கனி, பல்லாண்டு வாழ்க ஆகிய படங்கள் வெளிவந்தன.


இதில் இதயக்கனி மெகா ஹிட் படம். இது சத்யா மூவிஸ் தயாரிப்பு. எம்.ஜி. ஆருடன் இணைந்து நடித்தவர் ஹிந்தி நடிகை ராதா சலுஜா மற்றும் மனோகர், கோபால கிருஷ்ணன், கே.கண்ணன், ராஜ சுலோசனா, பண்டரிபாய், நிர்மலா ஆகியோரும் நடித்தனர்.

பத்திரிகையாளராக இருந்து சினிமா டைரக்டரான ஏ.ஜெகநாதன் இதை டைரக்ட் செய்தார். ஜெகதீசன் வசனம் எழுதினார்.

### பாடல்கள் சிறப்பாக அமைந்தன

புலமைப்பித்தன் எழுதிய இதயக்கனி, நீங்க நல்லா இருக்கணும் நாடு முன்னேற, இன்பமே உந்தன் பேர் பெண்மையோ ஆகிய பாடல்களும் வாலி எழுதிய இதழே இதழே தேன் வேண்டும், புன்னகையில் கோடி ஆகிய பாடல்கள் ஹிட் ஆயின.

ராண்டார் கை எழுதிய ஆங்கிலப்பாடல் ஒன்று இப்படத்தில் இடம்பெற்றது.



சென்னையில் 3 தியேட்டர்களில் நூறுநாட்கள் கொண்டாடிய இப்படம் மதுரையில் 146 நாட்களும் திருச்சி, கோவை, சேலம் உட்பட பல ஊர்களில் நூறு நாட்களும் ஓடியது.

### பல்லாண்டு வாழ்க

பிரபல ஹிந்தி டைரக்டர் வி.சாந்தாராம் தயாரித்த தோ.ஆங்கேன் பாராஹாத் என்ற சிறந்த படத்தை பல்லாண்டு வாழ்க என்ற பெயரில் உதயம் புரொடக்‌ஷன்ஸ் தயாரித்தது. ஆர்.கே.சண்முகம் வசனம் எழுத கே.சங்கர் டைரக்ட் செய்தார்.

ஹிந்தியில் சாந்தாராம் நடித்த வேடத்தில் (திருடர்களைத் திருத்தும் பொலிஸ் அதிகாரியாக) எம்.ஜி.ஆர். நடித்தார். அவருடன் லதா இணைந்து நடித்தார்.

சிறந்த கதை அம்சம் உள்ள இப்படம் முக்கிய ஊர்களில் நூறுநாட்கள் ஓடின. 1977 தேர்தலில் வெற்றி பெற்ற எம்.ஜி.ஆர். தமிழக முதலமைச்சராகப் பொறுப் பேற்றார். அவர் கடைசியாக நடித்த படம் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்.

### நவரத்தினம்

சிவாஜிகணேசனை வைத்து திருவிளையாடல், சரஸ்வதி சபதம், தில்லானா மோகானம் பாள் முதலான வெற்றிப் படங்களை எடுத்து வந்த ஏ.பி.நாகராஜன், எம்.ஜி.ஆரை வைத்து ஒரு படம் தயாரிக்க விரும்பினார்: அதற்கு எம்.ஜி. ஆர்.சம்மதித்தார். (தொடரும்)

# இலங்கையின் அடுத்த...

(16 ஆம் பக்க கட்டுரையின் தொடர்ச்சி...)

ஆனால் அதிகூடிய நிலையில் உள்ளவர்களுக்கு அப்பால் இளநிலை அதிகாரிகள் பதவி உயர்வுகள் வழங்கப்பட முடியாது.

ஆனால் இவற்றுக்கு மாறாக முன்னாள் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க குறித்த சில இளநிலை அதிகாரிகளுக்கு, முதுநிலை மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வு வழங்கியிருந்தார். இதனால் சில மேஜர் ஜெனரல்கள் ஏழு ஆண்டுகளாக அதே நிலையில் பதவி வகித்துள்ளனர். இது தமக்கு எதிராக விடுக்கப்பட்ட அநீதி என இவர்கள் கூறுகின்றனர். தம்மால் முதுநிலைப் பதவிகளை வகிக்க முடியாதுள்ளதாகவும் இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளையில், பதவியிலுள்ள நான்கு மேஜர் ஜெனரல்கள், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் மற்றும் முன்னாள் மேஜர் ஜெனரல் ஒருவர் போன்றோர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் சந்திப்பை மேற்கொண்டமை தொடர்பாக இராணுவப் புலனாய்வு அறிக்கை ஒன்றை வழங்கியுள்ளது. அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், ஏனைய அரச நிறுவனங்கள் போன்றவற்றுடன் சந்திப்புக்களை மேற்கொள்வதற்கு முன்னர் இராணுவத் தளபதியின் அனுமதி பெறப்பட வேண்டும் என இராணுவ சுற்று நிருபங்கள் மற்றும் அறிவுறுத்தல்களில். சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இவ்வாறானதொரு சந்திப்பும் இடம் பெறவில்லை என பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த அதிகாரிகளால் அச்சுறுத்தப்படுபவர்களாலேயே இவ்வாறானதொரு கட்டுக்கதை உருவாக்கப்பட்டதாகவும் 'த சண்டே லீடரிடம்' குறித்த அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

'தாங்கள் இராணுவத் தளபதியாக வருவதற்கான வாய்ப்பை இதன்மூலம் இழந்துவிடுவோமோ என இவர்கள் அச்சம் கொள்கின்றனர்' எனவும் குறித்த அதிகாரி தெரிவித்தார். போரின் போது முக்கிய பங்காற்றியிருந்த சில மூத்த இராணுவ அதிகாரிகள் சாதாரணமாக ஓய்வு வழங்கப்பட்டமையே இவர்களுக்கு வழங்கப்பட்ட பரிசாகும். இராணுவம் மற்றும் இந்த நாடு முழுவதற்கும் சேவையாற்றிய போதிலும் தமது பங்களிப்புக்களை எவரும் வெளிப்படுத்தவோ அல்லது பாராட்டவோ முன்வரவில்லை என இந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமது பதவிக்காலத்தை மேலும் அதிகரிக்குமாறு மேஜர் ஜெனரல்கள் அடங்கிய குழுவொன்று நாட்டின் அதிபரைச் சந்தித்து கோரியதாகக் கூறப்படுவது பொய்யென இவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். எனினும், போரின போது பங்காற்றிய மேஜர ஜெனரல்கள் அடங்கிய குழுவொன்று சீதுவையிலுள்ள ஒன்றிச் விடுதியில் இலங்கை ஜனாதிபதயுடன்மதிய உணவை உண்டனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலராலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முன்னர் அனைத்து மேஜர் ஜெனரல்களும் இராணுவத் தளபதியிடம் அனுமதி பெற்றிருந்தனர். 'நாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்தபோது எமது பதவிக்காலத்தை அதிகரிக்குமாறு கோரவில்லை. ஆனால் ஜனாதிபதி எம்மிடம் கருத்துக்களைப்பகிருமாறு கோரியபோது, ஜெனிவாவில் எமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் தற்போது இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் சந்திக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறினோம். எம்மீது பல்வேறு அவதூறுகள் இடப்படுவதாகவும் கூறினோம். இதனால் புலனாய்வு அதிகாரிகள் தொடர்ந்தும் பணியாற்ற அச்சப்படுகின்றனர் எனவும் ஜனாதிபதியிடம் கூறினோம்' என குறித்த அதிகாரி தெரிவித்தார்.

இராணுவத் தளபதியைத் தொடர்புகொண்டு அவரது பதவிக்கால நீடிப்புத் தொடர்பாக வினவியபோது தனக்கும் அதுபற்றித் தெரியாது என அவர் தெரிவித்தார்.

எனினும், தற்போதைய இராணுவத் தளபதி சேவை நீடிப்புச் செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக உள்ளக இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கையின் தற்போதைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தனது பதவிக்காலத்தில், இராணுவத்திற்குள் அரசியல் செல்வாக்குச் செலுத்த அனுமதியாது வெளிப்படையான உறுதிமிக்க ஒரு இராணுவ அதிகாரியாகச் செயற்பட்டு வருகிறார் எனக் கூறப்படுகிறது. (முற்றும்)


ஆங்கிலத்தில் -Camelia Nathaniel
வழிமூலம் -த சண்டே லீடர்
மொழியாக்கம் - நித்தியபாரதி

# சர்வதேச அரச தலைவர்களுடன் ஜனாதிபதி



















ஜப்பானில் நடைபெறும் ஜீ-7 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்ற இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு பல நாட்டு அரச தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

# ஆசிரியர்கள் மீது பெற்றோர் தாக்குதல் ஆசிரியர்கள் விடுமுறைப் போராட்டம்

பாடசாலை மாணவி ஒருவரின் தங்கச் சங்கிலி காணாமல் போன சம்பவம் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையால், குறித்த மாணவியின் பெற்றோரினால் அப்பாடசாலையின் இரு ஆசிரியர்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அனைத்து ஆசிரியர்களும் நேற்று வியாழக்கிழமை சுகயீன விடுமுறை பெற்றதால் மாணவர்கள் பாடசாலைக்கு வந்து திரும்பிச் சென்றதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் சென். செபஸ்டியான் மகா வித்தியாலயத்தில் பணியாற்றும் 32 ஆசிரியர்கள் இவ்வாறு நேற்று சுகயீன விடுமுறை பெற்றிருந்ததாகவும் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவியின் தாய் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தலைமறைவாகியுள்ள தந்தையைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிலாபம் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் எட்டாம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி நேற்று முன்தினம் பாடசாலையில் வைத்துக் காணாமற்போனதை அடுத்து, பாடசாலை விடும் நேரம் பாடசாலைக்குச் சென்றுள்ள அம்மாணவியின் தாயும், தந்தையும் பாடசாலையின் பிரதான வாசலுக்கருகில் நின்று கொண்டு பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களையும் தகாத வார்த்தைகளைப் பாவித்து தூற்றிக் கொண்டு நின்றிருந்துள்ளனர்.

இந்நேரத்தில் அங்கு வந்துள்ள பாடசாலையின் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான ஆசிரியர் இவ்விடத்தில் சத்தம் போட வேண்டாம் எனவும், பாடசாலையின் உள்ளே வந்து பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறும் அப்பெற்றோரை அழைத்துள்ளார்.

அந்நேரம் அவர்கள் இருவரும் அந்த ஆசிரியரைத் தாக்கியுள்ளதாகவும், அதனை அவதானித்து அவ்விடத்திற்கு வந்த மற்றொரு ஆசிரியரையும் தாக்கிவிட்டு அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றதாகவும் தெரிவித்து சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாட்டையடுத்து விசாரணைகளைமேற்கொண்ட சிலாபம் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய தாயைக் கைது செய்துள்ளதோடு சம்பவத்தின் பின்னர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ள தந்தையைக் கைது செய்ய நடவடிக்கைமேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பாடசாலையில் பணியாற்றும் 32 ஆசிரியர்களும் நேற்றைய தினம் சுகயீன விடுமுறை பெற்றுக் கொண்டதால், அதனை அறியாது பாடசாலைக்கு வழமை போன்று வந்த மாணவர்கள், பாடசாலையில் ஆசிரியர்கள் வருகை தராததையடுத்து தத்தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# புகையிலை தூள் அடைக்கப்பட்ட 250 ரின்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

பொகவந்தலாவ டின்சின் நகரப் பகுதியில் புகையிலை தூள் அடைக்கப்பட்ட 250 ரின்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பொகவந்தலாவ பொலிஸாரால் மேற்கொள்ளபட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# தாயைக் கத்தியால் குத்திய மகன் கைது

(கொழும்பு)

தனது தாயாரை கத்தியால் குத்திய மகனை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர். 63 வயதுள்ள தாயையே 43 வயதுடைய மகன் கத்தியால் குத்தியதாக கண்டி பொலிஸார் தெரவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 5.30 மணியளவில் இடம் பெற்றதாகவும் இது ஒரு குடும்பப் பிரச்சினை காரணமாக இடம் பெற்றிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை அடுத்து சந்தேநபரை அவரின் இரு சகோதரர்கள் தாக்கியதாகவும் தெரியவந்துள்ளது. (இ-10)

## துயர் பகிர்கின்றோம்



*அமரர் சின்னத்துரை சிவஞானம்*

யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்துரை சிவஞானம்**

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(கி-4718)

**கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கம்.**


## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-27.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.28 | 148.08 |
| பிரிட்டன் | பவுண்ட் | 210.84 | 218.40 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 160.39 | 166.88 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 144.79 | 150.96 |
| கனடா | டொலர் | 110.33 | 114.99 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 103.22 | 108.15 |
| சிங்கப்பூர் | டொலர் | 104.51 | 108.60 |
| இந்தியா | ரூபா | 2.1747 | ------- |
| சீனா | யுவான் | 22.2204 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.5535 |
| குவைத் | டினார் | 482.6159 |
| ஓமான் | ரியால் | 378.5468 |
| கட்டார் | ரியால் | 40.0330 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8641 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6809 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 170 | 200 | 220 |
| உருளைக்கிழங்கு | 100 | 150 | 100 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 300 | 300 | 300 |
| தக்காளி | 180 | 200 | 170 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 | 80 | 60 |
| கோவா | 140 | 200 | 120 | 200 | 150 |
| கரட் | 150 | 200 | 180 | 200 | 100 |
| பூசணி | 60 | 50 | 35 | 60 | 40 |
| புடோல் | 120 | 100 | 80 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 20 | 30 | 120 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 150 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 400 | 200 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 100 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 200 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 200 | 150 | 100 | 120 | 160 |
| லீக்ஸ் | 180 | 200 | 170 | 260 | 200 |
| பீற்றூட் | 150 | 200 | 110 | 160 | 150 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 100 | 200 | 150 |
| போஞ்சி | 250 | 400 | — | 300 | 250 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 150 | 200 | 180 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 40 | 60 | 50 |
| தேசிக்காய் | 500 | 400 | 300 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 150 | 300 | 110 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 350 | — | — | — | 200 |
| முள்ளங்கி | 100 | — | — | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | — | 15 |
| ஈரப்பலா | 80 | 120 | 50 | — | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 20 ஆயிரம் இராணுவ வீரர்கள் பின்வாங்கி ஓட்டம் 190

**3 ஆவது தடவை**

இந்தச் சம்பவம் நடப்பதற்கு 6 மாதத்திற்கு முன்பு கொழும்பு நகரில் தமிழர் தலைவர் நீலம் திருச்செல்வம் மனித வெடிகுண்டுக்குப் பலியானார். விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள்.

அதன்பிறகு சந்திரிகாவின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. பிரதமர் அலுவலகம் அருகே மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது 6 மாதங்களில் 3 ஆவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

**குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொலை**

இந்தச் சம்பவம் நடந்த அடுத்த 2 மணி நேரத்தில் அதாவது 05.01.2000 அன்று முற்பகல் 11.30 மணிக்கு தமிழர் தலைவர் குமார் பொன்னம்பலம் (வயது-60) சுட்டுக் கொல்லப் பட்டார். மனித வெடிகுண்டு வெடித்த இடத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தக் கொலை வெறித் தாக்குதல் நடந்தது.

**காரில் சென்றபோது**

குமார் பொன்னம்பலம் வெள்ளவத்தை என்ற இடத்தில் இராமகிருஷ்ணா மார்க் ரோட்டில் காரில் போய்க் கொண்டிருந்தார். காரை அவரே ஓட்டிச் சென்றார். அப்போது மர்ம மனிதர்கள் சிலர் சரமாரியாகத்துப்பாக்கியால் சுட்னர்.

இதில் குமார் பொன்னம்பலம் மீது குண்டு பாய்ந்தது. அவர் பிணமாகச் சாய்ந்ததும் கொலையாளிகள் தப்பி ஓடி விட்டார்கள்.

**ஆதரவாளர்**

கொலை செய்யப்பட்ட குமார் பொன்னம்பலம் பழைய சிலோன் காங்கிரஸ் கட்சியின் தலைவர். இவர் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர். பிரபல சட்டத்தரணியும் தமிழ் காங்கிரஸ் நிறுவுனருமான ஜி.ஜி. பொன்னம்பலத்தின் மகன். குமார் பொன்னம்பலமும் சட்டத்தரணியாகப் பணியாற்றி வந்தார்.

தமிழர்களுக்கு எதிராக இராணுவத்தினரும் பொலிஸாரும் நடத்திய மனித உரிமை மீறல்களுக்காக நீதிமன்றத்தில் வாதாடியவர். பயங்கரவாதத்தை அகற்றுவதுதான் எங்கள் பணி என்று சந்திரிகா அறிவித்தபோது குமார் பொன்னம்பலம் பகிரங்கமாக அவருக்கு ஒரு கடிதம் எழுதினார். இலங்கைத் தீவில் பயங்கரவாதத்தை 1956 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது சிங்களவர்கள்தான். (பாராளுமன்றத்திற்கு முன்பு தமிழர்கள் சத்யாகிரகம் நடத்தியபோது அவர்களைச் சந்திரிகாவின் தந்தை பண்டார நாயக்க குண்டர்களைக் கொண்டு தாக்குதல் நடத்திய நிகழ்ச்சி) என்று குற்றம் சாட்டியிருந்தார். குமார் பொன்னம்பலம் கொலைக்கு, அவர் சந்திரிகாவுக்கு எழுதிய கடிதமே காரணம் என்று பரவலாகப் பேசப்பட்டது. குமார் பொன்னம்பலத்திற்கு மாமனிதர் பட்டம் அளித்து கௌரவித்தது விடுதலைப் புலிகள் இயக்கம்.


விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலைத் தொடர்ந்து 20 ஆயிரம் இராணுவ வீரர்கள் பின் வாங்கி ஓட்டம் பிடித்தனர். ஆனையிறவை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள். இந்தப் போரில் 1000 சிங்கள சிப்பாய்கள் பலியானார்கள்.

யாழ்ப்பாணக் கோட்டையில் தங்கி இருந்த இராணுவ வீரர்களை விரட்டி அடித்து கடந்த 1990 ஆம் ஆண்டு அந்த நகரை விடுதலைப்புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். இதன்பின்பு 1995 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் விடுதலைப்புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியது. அதில் இருந்து இதுவரை யாழ்ப்பாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

**விடுதலைப்புலிகள் தாக்குதல்**

சுமார் 4 இலட்சம் மக்கள் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவத்திடம் இருந்து மீட்கும் முயற்சியில் விடுதலைப்புலிகள் தீவிரமாக ஈடுபட்டனர். இதற்காக 27.03.2000 அன்று அவர்கள் புதிய தாக்குதலைத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாணம் கடல் சூழ்ந்த பகுதி ஆகும். ஆனையிறவு என்ற இடம் தான் யாழ்ப்பாணத்தை நாட்டின் எல்லாப் பகுதிகளுடன் இணைக்கும் முக்கிய நிலப்பகுதி ஆகும். இந்த இடம் தலைநகர் கொழும்பில் இருந்து 370 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. முக்கிய இடமாக விளங்கும் ஆனை யிறவில் மிகப்பெரிய முகாம் ஒன்றை இராணுவம் அமைத்திருந்தது. இங்கு 20 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் இருந்தனர்.





யானையிறவு இராணுவ முகாமை நோட்டமிடும் விடுதலைபுலிகளின் உளவுப்படையினர்

(தொடரும்)

நோயை தொடக்கத்திலேயே குணப்படுத்துங்கள். கடனை சிறிதாக இருக்கும் போதே செலுத்தி விடுங்கள் -கதே

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு அன்பு மடல்

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அன்பு வணக்கம். நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண சபையின் 53ஆவது அமர்வில் சபை உறுப்பினர் ஒருவர் வலம்புரியை மஞ்சள் பத்திரிகை என்று கூறியிருந்தார்.

பின்னர் அந்த சொற்பதம் கன்சாட்டில் இருந்து நீக்கப்பட்டது.

வலம்புரி மஞ்சள் பத்திரிகையா? என்பதை எம் மதிப்பார்ந்த தமிழ் மக்களே தீர்மானித்துக் கொள்வர். எனவே அது தொடர்பில் நாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

ஏனெனில் வலம்புரிப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு 16ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. 16 ஆண்டுகளைக் கடந்து வலம்புரிப் பத்திரிகை தனது மேலான பணியை வழங்கி வருகிறது. வலம்புரி நாளிதழை கட்டிக் காத்தவர்கள் எங்கள் உயிரிலும் மேலான தமிழ் மக்கள். எனவே வலம்புரி மஞ்சள் பத்திரிகையா? என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.

மாறாக வலம்புரி நாளிதழை மஞ்சள் பத்திரிகை என்று கூறியவர் தொடர்பிலும் தீர்ப்பளிக்க வேண்டியவர்கள் எங்கள் தமிழ் மக்கள் என்பதால், மஞ்சள் பத்திரிகை என்பது குறித்து நாம் ஒரு போதும் எதிர்வாதம் புரிய வேண்டியதில்லை.

இதற்கு மேலாக எம் ஊடகங்கள், ஊடக சகோதரர்கள் தாங்கள் யார் என்பதை-தங்களின் ஒற்றுமையை தெளிவாக வெளிப்படுத்தி உள்ளனர்.

எனவே வலம்புரி மஞ்சள் பத்திரிகை என்று கூறிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் தொடர்பில் நாம் இங்கு பிரஸ்தாபித்தால் அது சுயநலத்தின் பாற்பட்டது என்றாகி விடும்.

அறம் காக்க வேண்டும் என்று நினைக்கின்ற ஒரு பத்திரிகைக்கு இஃது அழகன்று என்பது நம் முடிவு.

எதுவாயினும் நம்மிடம் இருக்கக்கூடிய கவலை எல்லாம் போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் தமிழ் உறவுகளைத் தூக்கி விடுவதற்கு யார் உளர் என்பதுதான்.

வடக்கு மாகாண சபை எமக்குக் கிடைத்தால் எங்களால் முடிந்ததை செய்து, எங்கள் மக்களின் துன்பத்தை கொஞ்சமேனும் போக்கலாம் என்று நம்பினோம். இருந்தும் வடக்கு மாகாண சபையின் சில உறுப்பினர்கள் ஏனோ தெரியவில்லை சபையின் நடவடிக்கைகளை குழப்பி முதலமைச்சரின் நல்ல செயற்பாடுகளைத் திசைதிருப்பப் பெரும் பாடுபடுகின்றனர்.

அன்புக்குரிய வடக்கு மாகாண சபை உறுப்பினர்களே! இப்போதும் நாம் உங்களிடம் கேட்பது எங்கள் மக்களின் வாழ்வியல் பற்றி கவனம் செலுத்துங்கள். எங்கள் தாயகத்தின் பொருளாதாரம், இளைஞர்களின் வேலைவாய்ப்பு, உற்பத்தி முயற்சிகள், தொழிற்சாலைகள், வளப் பெருக்கங்கள், தமிழ்மொழிப் பாதுகாப்பு, மாணவர்களின்-இளைஞர்களின் ஒழுக்கம், பண்பாடு இவை பற்றி சிந்தியுங்கள். சபையில் இருக்கக்கூடிய நீங்கள் இதைச் சிந்திக்காவிட்டால் யார் சிந்திப்பர்.

ஒரு மாகாண அரசு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதை நாம் எவ்வாறு வழிப்படுத்துகிறோம் என்று யோசித்துப் பாருங்கள். கொழும்பில் இருக்கக்கூடிய ஒரு சிலரின் நாசகார செயலுக்கு நீங்கள் ஏன் பலியாகிறீர்கள். அவர்களை நம்பி உங்களுக்கு வாக்களித்த மக்களை மறந்து செயற்படுவது நியாயமா? என்று பாருங்கள்.

ஆகவே அன்புக்குரிய வடக்கு மாகாண சபை உறுப்பினர்களே! எங்கள் மக்களுக்கு உதவுவோம் என சத்தியம் செய்து முதலமைச்சருடன் சேர்ந்து திட்டமிட்டு செயல் ஆற்றுங்கள்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு நாங்கள் அல்லவா உதவி செய்ய வேண்டும். இதைச் செய்யாது விட்டால் பாவமும் பழியும் வந்து சேரும் என்பதை மறந்து விடாதீர்கள்.

# மகிந்த அரசாங்கம் கொள்வனவு செய்த ராடர் கருவிக்கு என்ன நடந்தது?

## 2600 இலட்சம் ரூபாய் எங்கே? – சஜித் கேள்வி

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தினால் 2ஆயிரத்து 600 இலட்சம் ரூபாய் செலவில் கடந்த 2011ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ராடர் கட்டமைப்பிற்கு என்ன நடந்தது என்பதை பொது எதிரணியினர் குழாம் விளக்கமளிக்க வேண்டும் என்று சமுர்த்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ சவால் விடுத்தார்.

சமுர்த்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஊழியர்கள் இணைந்து தங்களது தினச் சம்பளத்தை சேர்த்து வெள்ள நிவாரணங்களுக்கான பொருட்களை கொள்வனவு செய்து சம்பந்தப்பட்ட அமைச்சிடம் நேற்று வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

இதற்கான நிகழ்வு சமுர்த்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வளாகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சஜித் பிரேமதாஸ, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் சஜித் பிரேமதாஸ இந்த சவாலை விடுத்தார்.

அவர் தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிடுகையில்,

இயற்கைப் பேரழிவு ஏற்பட்டிருக்கும் நிலையில் இதனைப் பயன்படுத்திக்கொண்டு சிலர் அரசாங்கம் மீது சேறுபூசும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை அறிந்து கவலையடைகிறேன்.

அனர்த்தங்களை எதிர்கொள்ள அரசாங்கத்திடம் முன்னேற்பாட்டுத் திட்டம் இல்லை என்று ஒன்றிணைந்த எதிர்கட்சியின் தலைவரும், அதன் உறுப்பினர்களும அண்மையில் கூறியிருப்பதாக அறிகிறேன்.

அவர்களிடம் ஒரு கேள்வியை கேட்கின்றேன். இந்த முன்னேற்பாட்டுத் திட்டத்திற்காக நாட்டு மக்களின் 2ஆயிரத்து 600 இலட்சம் ரூபாய் பணத்தை விரயம் செய்து கடந்த 2011ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட டொப்லர் ராடர் கட்டமைப்பிற்கு நடந்தது என்ன?

கொங்கலகந்த என்னும் இடத்தில் அதனை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும், கடந்த அரசாங்கம் அதனை அமைப்பதற்கு முறையான பாதையைக்கூட தயார்செய்திருக்கவில்லை. அத்துடன் அந்த ராடர் கட்டமைப்பை தாங்கிச்சென்ற பாரந்தூக்கியும் உடைந்து வீழ்ந்ததை அறிவோம்.

அதனூடாக நமது நாட்டு மக்களின் 2ஆயிரத்து600 இலட்சம் ரூபாய் பணம் வீணடிக்கப்பட்டது. 3 வருடங்களாகியும் அந்த ராடர் கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்கு முடியாது போயிருக்கிறது.

எனினும் இன்று ஜப்பான் அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கத்திற்கு இரண்டு டொப்லர் ராடர் கட்டமைப்பு கருவிகளை இலவசமாகவே வழங்கியிருக்கின்றது. ஆச்சரியத்திற்கும், நல்லாட்சிக்கும் இடையிலான வித்தியாசம் இதுவே.

எனவே 2011ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட டொப்லர் ராடர் கருவிக்கு என்ன நடந்தது என்பதை விளக்குமாறு பொது எதிரணியினருக்கு சவால் விடுக்கின்றேன் என்றார். (செ-12)

## விவாதச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான விவாதச் சுற்றுப் போட்டி யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக யாழ்மாவட்டச்செயலக உளசமூக அதிகாரி கு.கௌதமன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில் 25 மாவட்டங்களிலும் இவ் விவாதச் சுற்றுப் போட்டியானது தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலம் இடம்பெறுகிறது.

அந்த வகையில் யாழ் மாவட்டத்தை சேர்ந்த 35 பாடசாலைகள் இப்போட்டியில பங்குபற்றவுள்ளன. இதில் நடுவர்களாக கல்விப்புல அதிகாரிகள், சட்டத்தரணிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் கடமையாற்றவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி தேசிய ரீதியில் நடைபெறும் போட்டியில் இடம் பெறும் என்பதுடன் இறுதிப் போட்டி நிகழ்வு ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பிரசன்னத்துடன் இடம பெறவுள்ளதாக அவர் மேலும தெரிவித்தார். (செ-9)

## மஹோற்சவம்

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் மஹோற்சவப் பெருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெரிய சப்பறத் திருவிழாவும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 7 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

## சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினம்- மே 31

உந்தன் போதை கலையாதோ?
உறவின் ஏக்கம் தொலையாதோ?
உந்தன் வாழ்க்கை மாறாதோ?
ஒருநாள் மாற்றம் வாராதோ?

நஞ்சை அள்ளி விதைத்திடுமாம்!
வலிகள் பலவும் தந்திடுமாம்!!
நாசமாய் உயிர்களை அழித்திடுமாம்!
புகை மறந்தால்
நிலை பெறுவோமே நீடூழி!!

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை.**

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



அன்புடையவனே வாழ்பவன்; சுயநலமுடையவன் செத்துக்கொண்டிருக்கிறான். ஆதலால் அன்பிற்காகவே செய். ஏனெனில் வாழ்வைப் பற்றிய ஒரே விதி அதுவே.

உலகிற்கு நன்மை செய்வதே நமது நோக்கம். நமது பெயர்களைப் பறைசாற்றுவதல்ல.

உங்கள் அனைவரிடமும் நான் வேண்டுவது ஒன்றே. உங்கள் தற்பெருமையை வளர்ப்பதையும் பிரிவு மனப்பான்மையையும் பொறாமை யையும் என்றைக்கும் ஒழித்துவிடவேண்டும் என்பதே அது. பூமிதேவியைப்போன்று அனைத்தையும் பொறுத்து கொள்ள வேண்டும். உங்களால் இதை அடைய முடியுமானால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.

கீழ்ப்படிவதை அறிபவனே கட்டளையிடவும் அறிவான். முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். ஒன்றாகக் கூடி வாழ்வதே நமக்கு வேண்டுவது. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை அதன் இரகசியம் கீழ்ப்படிதலே.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை **யாழ். பிரதேசத்தில்** முனீஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்ப்த்திரி வீதி சந்தியிலிருந்து வின்சர் சந்தி வரை, மின்சார நிலைய வீதி, பெரிய கடை வீதி, கம்பஸ்லேன், பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வேக்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராசவீதி, லைடன் பாம் பிரதேசம், கிருஸ்ணன் கோவில் சந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணிவீதி, இராணுவ முகாம, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, வைத்தியசாலை, கொமர்சியல் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ரில்கோ யாழ. நகர விடுதி, பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம், கார்கில்ஸ் யாழ். விடுதி, அபி கட்டடத் தொகுதி, யாழ். நுண்கலைப்பீடம், அம்பன் பிரதேசம், அம்பன் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** கரைச்சிக் குடியிருப்பு, முல்லைத்தீவு நகரம், உண்ணாப்புலவு, வட்டுவாகல், செல்வபுரம், மாவட்ட செயலகம் (கச்சேரி), கூள்மென் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, வவுனியா கிறிட்டிலிருந்து வவுனியா நகரம் வரை, 2ஆம் குறுக்குவீதி, குருமன்காடு பிரதேசம், அறவந்ததுலாவ , அறவந்ததுலாவ-02, Track-07, பழையனூர், ஓவியா விடுதி, ராணி அரிசி ஆலை, லங்கா ஆலை, செல்வராஜா ஆலை, கொம்பு வைத்தகுளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும்.

இதனைவிட **கிளிநொசசி பிரதேசத்தில** நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியிலிருந்து 5 மணிவரை கிளிநொச்சி நகரத்திலிருந்து கொக்காவில் வரைக்கும் இரத்தினபுரத்திலிருந்து திருவையாறு வரை சுகும் மத்திய வங்கி, SFHQ, இரணைமடு MAS Active, யுனிச் செலா, பொறியியல்பீடம், விவசாய பீடம், North Cargill's Agrifoods, 7 ஆவது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கைத் தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிர மரட்ண பிறைவேற் லிமிட் டெட், கொக்காவில் இராணுவ படைமுகாம் I,II மற்றும் III, ரூபவாஹினி தொலைத்தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத் தொடர்பு கோபுரம், இரணைமடு விமானப் படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம ஆகிய இடங்களில் மின் தடைப் படும். (இ-9)

# மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்தாட்ட போட்டி முடிவுகள்





































பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்தாட்ட போட்டியில் 15 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியும் பெண்கள் பிரிவில் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் சம்பியனாகின.

அதே போல் 19 வயது ஆண்களுக்கான போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணியும் பெண்கள் பிரிவில் யாழ். மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையும் சம்பியன் ஆகின. வடமாகாணபாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்ட போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு அரங்கில் இடம் பெற்றது. நடைபெற்ற போட்டி முடிபுகள் வருமாறு ,

**15 வயதுப்பிரிவு ஆண்கள்**

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணி முதலாமிடத்தையும் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும் யாழ்.கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலை மூன்றாமிடத்தையும் யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

**15 வயதுப்பிரிவு பெண்கள்**

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும் யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இரண்டாமிடத்தையும் யாழ்.மயிலணி சைவ மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் மன்னார் பற்றிமா ம.ம.வி. நான்காம் இத்தையும் பெற்றுக் கொண்டன.

**19 வயதுப்பிரிவு ஆண்கள்**

வ/வவுனியா தமிழ் மத்தி மகா வித்தியாலயம் முதலாமிடத்தையும் யாழ். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இரண்டாமிடத்தையும் யாழ். மானிப்பாய் இந்துக்கல்லூரி மூன்றாமிடத்தையும் யாழ்.ஹாட்லிக்கல்லூரி நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

**19 வயதுப்பிரிவு பெண்கள்**

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்தையும் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும் யாழ். யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மூன்றாமிடத்தையும் யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (க)

## அம்பாள் விளையாட்டுக்கழக கிரிக்கெட் சுற்றுப்போட்டி

அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட மேற்படி கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. விண்ணப்பக் கட்டணமாக ஆயிரம் ரூபா அறிவிடப்படுவதோடுசம்பியன்ஆகும்அணிக்குவெற்றிக்கிண்ணமும் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது. விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 757 0577, 077 254 7995, 077 918 0169 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(க)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அவுஸ்திரேலியா வாழ்கார்த்திகேசு குணரத்தினத்தின் ஆதரவில் இலங்கையின் முன்னணி கழகங்கள் பங்கு பற்றும் மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி (Setup) இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அநுராதபுரம், அம்பாறை, நுவரெலியா , மன்னார் மற்றும் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 8 முன்னணி அணிகள் மேற்படி போட்டியில் பங்குபற்றுகின்றன.

இறுதிப்போட்டியானது ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் மின்னொளியில் இடம்பெறும். (க)

## ஹென்றீசியன் சவால் கிண்ணம்
# சென்.அன்ரனிசை வீழ்த்தியது முல்லைத்தீவு சென்யூட் அணி

ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்யூட் அணி மோதியது.



ஆட்டம் ஆரம்பமாகி இரண்டாவது நிமிடத்திலேயே சென்யூட் வீரர் D.பியூஸ்லஸ் கோலடித்து அசத்தினார்.

சென். அன்ரனிஸ் அணிக்கு ஆரம்பதில் கோல் போடும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றபோதும் அதனை வீணடித்தது. இந் நிலையில் சென்யூட் அணி வீரர் பகிதரன் 25 ஆவது நிமிடத்தில் இரு தடுப்பாளர்களை தாண்டி சிறப்பான கோல் ஒன்றை போட ஆட்டம் சென்யூட் அணி வசமானது.

இரண்டாவது பாதியாட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணியினர் ஆட்டத்தை வேகப்படுத்த தண்ட உதை வாய்ப்பு ஒன்று கிடைக்கப் பெற்றது. இதனை முன்னணி வீரர் கலிஸ்டர் தவறவிட்டார். இருந்தபோதும் 58 ஆவது நிமிடத்தில் சிறப்பான கோலொன்றைப் போட்டு ஆட்டத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்தினார்.

67 ஆவது நிமிடத்தில் சென்யூட் அணி வீரர் தீபன் மேலுமொரு கோல் அடித்து அசத்தினார். அடுத்த சில நிமிடத்திலேயே சென். அன்ரனிஸ் அணிக்கு மேலும் ஒரு பனால்டி வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. டிக்சன் கோலாக்க ஆட்டத்தின் இறுதிப் பகுதி மேலும் பரபரப்பானது.

சென். அன்ரனிஸ் அணி கோலடிக்க கடுமையாக முற்பட்ட போதும் அது நிறைவேறவில்லை. இறுதியில் முல்லை . சென்யூட் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று C பிரிவில் யங்கம்பன்ஸ், ஹென்றீஸ் அணிகளுடன் 3 ஆவது அணியாக நுழைந்தது. (க)

SPORTS வலம்புரி விளையாட்டுச் செய்திகள்

## கழுகுகளின் கிரிக்கெட்; விண்ணப்பிக்குக

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 8 வீரர்கள் 6 ஓவர்கள் கொண்ட மேற்படி போட்டி வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் 2 ஆம் இடத்தினை பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும்.

விண்ணப்பக்கட்டணமாக 3 ஆயிரம் ரூபா அறவிடப்படுவதோடு விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் மாதம் 5 ஆம் திகதியாகும்.

தொடர்புக்கு:- அகிலன் - 077 827 6858, திவாகர் - 077 295 2839. (க)

# கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் உள்ள வீட்டின் முன்புற பகுதியிலிருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு 9 மணியளவில் சுன்னாகம் பொலிஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து அங்கு வந்த பொலிஸார் மேற்படி குண்டினை பாதுகாப்பாக மீட்டுச் சென்றுள்ளனர். (செ-9)

# குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் றக்கா பகுதியிலிருந்து 32 வயதுடைய குடும்பப் பெண்ணொருவர், அவரது வீட்டிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக மீட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தார்.

வீட்டிலுள்ளவர்கள் கோயிலுக்குச் சென்று திரும்பி வந்து பார்த்தபோது குறித்த பெண், உயிரிழந்த நிலையில் கிடந்துள்ளார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளதெனவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (செ-12)

## மிகச் சிறந்த நியா...

தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நான் அண்மையில் யாழ் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வந்த போது தொழில் நியாய சபை ஒன்றை இங்கு அமைப்பதற்கு ஆலோசனை தெரிவித்திருந்தேன். ஏனெனில் தொழில்துறை சார்ந்த பிரச்சனைகள் ஏற்படும் போது அதை தீர்த்துக் கொள்வதற்காக இங்கிருந்து அனுராதபுரத்துக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் மக்களுக்கு நேரம், பணம் என்பன வீணான செலவை ஏற்படுத்தியது.

ஆகையால் தொழில் நியாய சபையை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு பொருத்தமான இடத்தை தேடி முயற்சித்த போது யாழ் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் பொருத்தமான ஒரு இடம் கிடைத்தது. எனது அமைச்சின் செயலாளரும் உத்தியோகத்தர்களும் திறமையாக பணியாற்றி இத் தொழில் நியாய சபையை இங்கு நிறுவியுள்ளனர்.

இலங்கையில் உள்ள ஏனைய தொழில் நியாய சபைகளுடன் ஒப்பிடும் பொழுது யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள தொழில் நியாய சபையே மிகச்சிறந்தது. அதற்கு பௌதீக உபகரண வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தினால் முன்னுரிமையாக வடக்கு கிழக்கில் நீதிமன்ற தொகுதிகளை அமைத்து நீதித்துறையை சிறப்பாக இயங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்த வகையில் நன்கு அமைக்கப்பட்ட நீதிமன்ற தொகுதிகளோடு இப்போது நன்கு இயங்குகின்றன.

பிரச்சனைகள் நடந்து கொண்டிருந்த காலத்தில் நீதித்துறைசார்ந்தவர்கள் பணியாற்றக்கூடியதான சூழ்நிலை இருந்ததில்லை. நீதித்துறைபெரும் சீர்கேட்டுக்குள் இருந்தது. நீதிபரிபாலனத்தின் மீதுதாக்குதல்கள் இடம் பெற்றன.

நம்பிக்கையில்லா பிரேரணை என்று கூறிக்கொண்டு 48 மணி நேரத்துக்குள் பிரதம நீதியரசரை தூக்கி எறிந்தனர். நீதித்துறையை காப்பாற்ற போராட்டினோம். முன்னைய அரசாங்கத்தினால் நாங்கள் எமது கடமையை கைவிடவில்லை. ஊயிரை பணயம் வைத்து நீதித்துறையை காப்பாற்றப் போராடினோம்.

முன்னைய அரசாங்கம் மேற்கொண்ட நீதித்துறை மீதான அநியாயங்களை எதிர்ப்பதில் யாழ் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் முன்னிலையில் நின்று போராடியது. நாட்டின் ஏனைய சட்டத்தரணிகள் சங்கத்தை விட யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்துக்கு நீதித்துறையை காப்பாற்ற முன்னின்ற பெருமை சேரும் என தெரிவித்தார்.

மேலும் தனது நீண்ட உரையில் தொழில நியாய சபையின் அதிகாரங்களும் செயற்பாடுகளும் பற்றி விளக்கமாக உரையாற்றினார். (செ-9)

## இலங்கை தமி...

ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் குறித்தும், 13-வது முறையாக தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக நான் தேர்வு செய்யப்பட்டது குறித்தும் அன்போடும், பாசத்தோடும் நீங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் சார்பில் தாங்கள் தெரிவித்துள்ள வாழ்த்துக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கைத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வு பெறுவதற்கு என்னுடைய பங்களிப்பு தொடர வேண்டுமென்று உங்கள் கடிதத்தில் எழுதியிருந்தீர்கள்.

1956-ம் ஆண்டிலிருந்து தொடங்கிய அந்தப்பணி நீங்கள் விரும்பியது போல என்றைக்கும் தொடரும் என்ற உறுதியினை உங்களுக்கும், இலங்கைத் தமிழ் மக்களுக்கும் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்று கருணாநிதி கூறியுள்ளார். (செ-12)

## மத்தியஸ்தர்களு...

நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபையில் (காணி) 27 மத்தியஸ்தர்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட மத்தியஸ்த சபையில் (காணி) 17 மத்தியஸ்தர்களுக்கும் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

குறித்த மத்தியஸ்த சபையானது வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும், மத்திய மாகாணத்தில் அனுராதபுரத்திலும் நீதி அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கபட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சின் பிரதி அமைச்சர் சுமந்தமித்ரபால, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஹெக்டர் எஸ். யாபா, சிறுவர் மற்றும் மகளிர விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன், மற்றும் அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.(செ-9)

## இராணுவத்தின்...

குறித்து விசாரனைகளை மேற்கொள்ள உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மூன்று யாழ்வாசிகள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஆராய்ந்த பின்னர் தலைமை நீதிபதி ஸ்ரீபவன் உள்பட, மூவர் அடங்கிய நீதிபதிகளின் குழு இந்த உத்தரவை பிறப்பித்தது.

கடந்த 2013-ம் ஆண்டு இராணுவம் காணி சட்ட விதிமுறைகளுக்கு மாறாக தங்களது காணிகளை கையகப்படுத்தியதாக தெரிவித்துள்ள மனுதாரர்கள், தங்களுக்கு நஷ்டஈடு பெற்று கொடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுக்களை சமர்ப்பித்தனர்

சம்பந்தப்பட்ட காணிகளை இராணுவம் கையகப்படுத்தியதாக அரசத்தரப்பின் வழக்கறிஞர் தெரிவித்த போதிலும் அதனை உறுதிப் படுத்தக் கூடிய தகுந்த ஆவணங்களை அவர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

எனவே, இந்தப் முறைப்பாடு குறித்து விசாரணைகளை மேற்கொள்வது அவசியமென்று கூறிய தலைமை நந்திபதி, வழக்கு விசாரணை நவம்பர் மாதம் 2-ம் தேதி நடைபெறுமென்று அறிவித்தார்.

அன்றைய தினம் இந்த முறைப்பாடு குறித்து விளக்கமளிக்குமாறு மனுக்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த இராணுவ தளபதி உட்பட அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (செ-12)

## பாதிக்கப்பட்டோரின்...

மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்ஆசிய பிராந்திய பணிப்பாளர் ப்ரட் அட்டம்ஸ் வெளியிட்டுள்ள மேற்படி அறிக்கையில்,

கடந்த வருடம் ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் மாநாட்டில், காணாமல் போனோர் தொடர்பான பணியகம் உள்ளிட்ட நீதி வழங்கும் பொறிமுறைகள் தொடர்பில், தேசிய மட்டத்திலான கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என இலங்கை உறுதி மொழி வழங்கி இருந்தது.

எனினும் அவ்வாறான கலந்துரையாடல்கள் எவையும் நடத்தப்படாமலேயே கடந்த 24ஆம் திகதி காணாமல் போனோர் குறித்த பணியகத்தை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி இருக்கிறது. இதனை மனித உரிமை கண்காணிப்பகம் ஏற்றுக் கொள்ளாது.

பாதிக்கப்பட்டோரின் குடும்பங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்களுடன் கலந்தாலோசித்தே, காணாமல் போனவர்கள் தொடர்பிலான பணியகம் அமைக்கப்பட வேண்டும்

காணாமல் போனவர்கள் தொடர்பிலான பணியகம் மிகவும் அவசியமானது என்ற போதிலும், ஆலோசனை நடத்தியதன் பின்னரே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பலவந்த கடத்தல்கள் தொடர்பிலான சர்வதேச பிரகடனத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ள போதிலும் அதன் உள்ளடக்கத்திற்கு அமைய அது செயற்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## பொறுப்புக்கூறல்...

ஆலோசனை நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதில் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி, கூட்டுப் படைகளின் தளபதி எயர் சீவ் மார்ஷல் கோலித குணதிலக, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, இராணுவத்தின், மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் மற்றும் இறுதிக்கட்டப் போரில் பணியாற்றிய பிரிகேடியர் நிலையில் உள்ள முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது, கிழக்கு மாகாண முதலமைச்சர், கடற்படை அதிகாரியை திட்டிய விவகாரம் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறை தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட பிரதமர், போரின் போது இடம் பெற்றதாக கூறப்படும், அனைத்து மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையும் விசாரிக்கும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு விரைவில் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவினால் தீர்க்கப்பட முடியாத விடயங்கள், உயர்நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படும்.

வெளிநாட்டு சட்டவாளர்கள், ஆலோசனைகளை வழங்குவார்கள். எனினும் அவர்கள் விசாரணைகளில் பங்கேற்கமாட்டார்கள்.

குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு எந்தவொரு அனைத்துலக அமைப்பினதும், அழுத்தங்களை நாடு எதிர்கொள்ளவில்லை.

ஆனால், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு,கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக விளக்கமளித்த பிரதமர், போரின்போது இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தனியார் காணிகளை மீள ஒப்படைக்க வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# வாகன விபத்து யுவதி காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி உரும்பிராய் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யுவதி ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பலாலி வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு யுவதிகள் உரும்பிராய் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் திரும்ப முற்பட்டவேளை யாழ்ப்பாணத்திலிருந்து உரும்பிராய் நோக்கி இளைஞர் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய யுவதியின் தலையில் சிறு காயம் ஏற்பட்டுள்ளதுடன் பின்னால் இருந்த யுவதிக்கும் விபத்துக்குள்ளான மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனுக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. எனினும் விபத்தில் சிக்கிய இரு மோட்டார் சைக்கிளும் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

காயமடைந்த யுவதி மருத்துவனைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் விபத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சமரசமாக சென்றமையால் பொலிஸாருக்கு குறித்த விபத்து தொடர்பாக முறையிடப்படவில்லை. (செ-87)

# பசு வதை தடுத்தல் விழிப்புணர்வு நாளை

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் வீணாகான குருபீடம் நடத்தும் பசு வதை தடுத்தல் விழிப்புணர்வு ஊர்வலம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வீணாகான குருபீட சன்னிதாச்சாரியார் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

சித்தன்கேணி ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகும் மேற்படி ஊர்வலம் சிவ சிதம்பரேஸ்வரர் தரிசனத்துடன் வழக்கம்பரை அம்மன் ஆலயம் வரை சென்று முடிவடையவுள்ளது. (செ-11)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

792062687V என்னும் இலக்கத்தை கொண்ட சோமவத்திகே பிரேமரட்ண என்பவரது தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதி பத்திரம் உள்ளடங்களான கைப்பை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி மேற்படி ஆவணங்களை வலம்புரி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (செ-11)

# விபத்துக்குள்ளான பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பண்ணைப் பகுதியில் முச்சக்கரவண்டி விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பெண், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம பெற்றுள்ளது.

நாரந்தனை தெற்கு ஊர்காவற்துறையைச் சேர்ந்த 63 வயதுடைய மேரிமாக்கட் என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த 10 நாட்களாக யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி மருமகனின் முச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்த போது, வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி பாலத்தின் தடுப்பு கட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-30)

## அனர்த்த...

வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

வெள்ளம் வடிந்துள்ள பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்புடன் துப்புரவு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள 21,484 பேர் 210 தற்காலிக முகாம்களில் தற்போது தங்கியுள்ளதாகவும், அவர்களுக்கான நிவாரணங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதவிர வெள்ளம் வடிந்துள்ள பகுதிகளில் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும், ஆறுகளின் நீர்மட்டம் தற்போது குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்கள தகவல்கள் குறிப்பிட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

ஆயினும், களுத்துறை, கேகாலை, கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை அமுலில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மண்சரிவு ஏற்படக்கூடிய அறிகுறிகள் அடையாளங்காணப்படும் பட்சத்தில் உடனடியாக அந்த பகுதிகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வது சிறந்ததாகும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பொது இடங்களை துப்புரவு செய்த பின்னர் மக்களின் வீடுகளையும் துப்புரவு செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக சிவில் பாதுகாப்புத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்பொருட்டு 2 ஆயிரம் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சிவில் பாதுகாப்புத் திணைகளத்தின் ஊடகப் பேச்சாளரும், பணிப்பாளருமான மேஜர் வஜிரகுமாரதுங்க கூறினார்.

கடற்படை வீர்ரகள் தொடர்ந்தும் துப்புரவு பணிகளில் ஈடுபட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார்.

களனி ஆற்றை அண்மித்துள்ள கால்வாய்கள் மற்றும் வடிகாண் கட்டமைப்புகளையும், பொது இடங்களையும் கடற்படையினர் துப்புரவு செய்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார். (செ-12)

## இலங்கையின்...

யல் சக்திகளினால் மேற்கொள்ளப்படும் போலிப் பிரசாரங்களுக்கு ஏமாற்றமடைய வேண்டாமென மக்களிடம் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி, தமது தாய் நாட்டின் மீதான நல்ல தொலைநோக்குடன் தாய் நாட்டை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

எமது பாதுகாப்புப் படையினருக்கு அவசியமான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கு அன்று சர்வதேசத்தில் சில நாடுகள் நிராகரித்திருந்ததுடன் இன்று மீண்டும் எமது பாதுகாப்புப் படையினருக்கு அப்பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு அவர்கள் முன்வந்திருப்பதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசாங்கம் பாதுகாப்புப் படையினரை காட்டிக்கொடுப்பதாக சில இணையத்தளங்களினூடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை தாம் முழுமையாக நிராகரிப்பதாகவும் குறிப்பிட்டார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றாத காரணத்தினால் தற்போதைய அரசாங்கத்திற்கு சர்வதேசத்தின் முன்னால் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஜப்பான் வியட்நாம், கொரியா போன்ற நாடுகள் யுத்த வெற்றியை ஒரு நிரந்தர வெற்றியாக மாற்றி உலகின் முன்னணி நாடுகளாக மாறியிருப்பதை சுட்டிக்காடடியதுடன், இலங்கை அந்த நிலைமையை தவறவிட்டிருந்ததாகவும குறிப்பிட்டார்.

தேசிய நல்லிணக்கத்தை கற்கள் மற்றும் சீமெந்தினைக் கொண்டு கட்டியெழுப்ப முடியாது என்பதோடு, 27 வருட காலமாக வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்கள் மத்தியில் இருந்து வந்த சந்தேகம் மற்றும் நம்பிக்கையீனத்தை கற்களினாலும சீமெந்தினாலும் நீக்கிவட முடியதென்றும் குறிப்பிட்டார்.

வடக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பாக இங்கு கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி, தமக்குச் சொந்தமான ஒரு காணியை வேறு ஒருவர் கையகப்படுத்திக் கொள்ளும் பட்சத்தில் ஒரு மாதம், இரண்டு மாதம், ஒரு வருடம் பொறுத்துக் கொள்ள முடியுமென்றும் அதற்குமேல் அப்படி அதனை பொறுத்துக் கொள்ள முடியாதென்றாலும் வடக்கு மக்கள் கோருவது அவர்களுடைய 27 வருட எதிர்பார்ப்பாகுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜி - 7 மாநாட்டில் தமக்கு நாடுகளின் தலைவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற நட்புறவுடன் கூடிய வரவேற்பு தொடர்பில் இங்கு நினைவு கூர்ந்த ஜனாதிபதி, இலங்கையின் புதிய அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து சர்வதேசத்தின் நம்பிக்கையையும் ஆசீர்வாதத்தையும் இது எடுத்துக் காட்டுவதாகக் குறிப்பிட்டார்.

ஜப்பானில் வாழும் இலங்கையர்களினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பெரு வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், ஜனாதிபதி இலங்கை சமூகத்தினருடன் சுமுகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (செ-12)

## வாகனங்களி...

தலைவர் இந்திக சம்பத் மெரன்சிகே இதனைக் கூறியுள்ளார்.

அதன்படி 1000 CC இற்கு மேற்பட்ட வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளின விலைகளே இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளன.

வான் மற்றும் லொறிகளின் விலை அதிகரிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அதிகரிப்பு விபரங்கள் வருமாறு, முச்சக்கர வண்டிக்காக வரி மாத்திரம் 4 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்படவுள்ளது.

டொயோட்டா ப்ரியஸ் (**Toyota Prius**) வகை காருக்கான வரி 33 இலட்சம் ரூபாயில் இருந்து 72 இலட்சம் வரை அதிகரிக்கிறது.

நிசான் எக்ஸ் ட்ரயல் (**Nissan X-trail**) 40 இலட்சம் ரூபாய் வரியில் இருந்து 80 இலடசம் வரை அதிகரிக்கிறது. (செ-12)

**Group Classes - Science**
By.Mr.RAGUMAR
Grade - 6,7,8,9,10,11 (English Medium)
(Kalviyankadu)
077 605 9650
(4774)

**Dutch, Deutsch, French**
தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.
- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழி கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைக்ள்.


அனைத்து புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
077 4842 464
(Gov. Reg: W/A 76795)

**விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள உழவு இயந்திர பெட்டி மற்றும் 21 - XXXX எனும் தொடரிலக்கத்தையுடைய என்.பி நைன்ரி மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு.
077 473 0722
077 104 0992
(4775)

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் மங்களதேவி



கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் பொற்ஸ்வானாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மங்களதேவி கடந்த 20.05.2016 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் மகேந்திரன் (ஓய்வுநிலை ஆசிரியர்), சூரியகுமார் (கனடா), வசந்தகுமார் (கனடா), பாலகுமார் (டென்மார்க்), நந்தகுமார் (லண்டன்), செல்வகுமார் (கனடா), ரஞ்சினி கோகுலநாதன் (பொற்ஸ்வானா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாமா, சூரியேஸ்வரி, லோகா, ஜெயா, வேணி, கோகுலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலசிங்கம், காலம்சென்றவர்களான சுந்தரசிங்கம், குருகுலசிங்கம் மற்றும் பூபாலசிங்கம் (நிர்வாகி - பிகொன் கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம், கரணவாய் தெற்கு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை பொற்ஸ்வானாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வரணியா தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி.
T.P :- 0778318964
(C-4714)
தகவல் : குடும்பத்தினர்

**காணி விற்பனைக்கு**
சித்தங்கேணி பண்டத்தரிப்பு பிரதான வீதியில் வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையத்துக்குப் பின்புறத்தில் 2--வது காணி நிலப்பரப்பு - 4, குளி - 3ம் விற்பனைக்கு உண்டு.
(நன்னீர்க்கிணற்று வசதியும் உண்டு)
தொலைபேசி இல :
0774437501
(4786)

**அலுவலக வேலை வாய்ப்பு**

ELLAAM (PVT)LTD V2 TRAVELS & TOURS
- அலுவலக முகாமைத்துவம் - OFFICE ADMINISTRATION
- வியாபார முகாமைத்துவம் - BUSINESS ADMINISTRATION
- வியாபாரத்திற்கான ஆங்கிலம் - ENGLISH FOR BUSINESS
- வாடிக்கையாளர் சேவை முகாமைத்துவம் - CUSTOMER CARE MANAGEMENT
- அடிப்படை கணக்கியல் - BASIC ACCOUNTING
- விமான ரிக்கற் பதிவு கற்கைநெறி - AIRLINE TICKET BOOKING SYSTEM
- சுற்றுலாத்துறை முகாமைத்துவம் - INBOUND,OUTBOUND TOURISM
- அடிப்படை கணினி பயிற்சி - MS OFFICE (Word,Excel,Powerpoint)
- விளம்பரம் - MARKETING
- போட்டோ சொப் - PHOTOSHOP

நீங்கள் 18 தொடக்கம் 30 வயதிற்த இடைப்பட்டவரா? நீங்கள் விரும்பிய வேலையை உடனே பெற்றுக்கொள்ள மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வேலை அனுபவத்தினை பெற்றுக்கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: 0768226243
AIRLINE TICKETING ,INTERNATIONAL & DOMESTIC COURIER SERVICES,DESIGNING, MARKETING, CUSTOMER CARE போன்ற பல்வேறு சேவைகளில் ஈடுபட்டுவரும் எம்முடன் இணைந்து பயிற்சியுடன் கூடிய நேரடி வியாபார அனுபவத்தினை பெறுங்கள்.
6 மாத பயிற்சியின் முடிவில் 15,000/=க்கு குறையாத வேலைவாய்ப்பு 100% எம்மால் ஏற்படுத்தித்தரப்படும்
6 மாத முடிவில் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற Airline ticket booking சான்றிதழ் வழங்கப்படும்
முதலாவது அணியில் 10 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்படுவர்.
நேர்முகத்தேர்வு -29-05-2016
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.
(யாழ் பொதுநூலகத்திற்கு முன்னால் உள்ள வீதி)
கட்டாயமாக சுயவிபரக்கோவை(CV)மற்றும் தகமைச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகளுடன்(photo copy)வரவும்.
(C-4721)

**வாடகைக்கு**
கந்தர்மடம் அரசடி வீதியில் சிறிய வீடு வாடகைக்குண்டு. யாழ்.பல்கலைக்கழகம், இந்து மகளிர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு அருகில்.
தொடர்பு :
0777 36 18 72
(4780)

**பணிப்பெண் தேவை**
2 பேர் உள்ள குடும்பத்தில் வீட்டுப் பணி செய்வதற்கு எவ்விதமான பொறுப்புமற்ற ஒரு பணிப்பெண் உடனடியாக தேவை.
021 226 0277
பணி செய்ய வேண்டிய இடம் :
சி.சிவசுப்பிரமணியம்
கந்தமுருகேசனார் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.
(4785)



(4788)

## வடமாகாண பாடசாலை அதிபர்களுக்கு தாழ்மையான வேண்டுகோள்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் 63 வயது நிரம்பிய நான், தற்பொழுது லண்டனில் வசிக்கிறேன். நான் உங்கள் பாடசாலைகளில், கிராமங்களில் கால்களை இழந்த மாணவர்களுக்கு என்னால் இயன்ற சிறிய உதவி செய்ய விரும்புகின்றேன். அவ்வாறாயின் அம் மாணவர்களின் பெயர், விலாசம் போன்ற விபரங்களைக் கீழே உள்ள மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

E-mail :- Rasa142@hotmail.com

(4777)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.